விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 336 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 04 திங்கட்கிழமை (20.11.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## யாழ்.போதனாவில் விளக்கமறியல் கைதி மரணம்

### பொலிஸார் அடித்து சித்திரவதை என உறவினர்கள் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த விளக்கமறியல் கைதி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வட்டுக்கோட்டை சித்தங்கேணி பகுதியைச் சேர்ந்த 26 வயதான நாகராசா அலெக்ஸ் என்பவரே நேற்று உயிரிழந்துள்ளார்.

சிகிச்சைக்காக ▷15

## கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அகழ்வு

### திட்டமிட்டபடி இன்று ஆரம்பம்

(முல்லைத்தீவு)

கொக்குதொடுவாய் மனித புதைகுழி அகழ்வு பணியானது ஏற்கெனவே திட்டமிட்டபடி இன்று ஆரம்பித்து தொடர்ச்சியாக இடம்பெறவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையின் சட்ட வைத்திய நிபுணர் கனகசபாபதி வாசுதேவ தெரிவித்தார்.

அகழ்வுப்பணி தொடர்பாக நேற்று தொடர்பு கொண்டு வினவியபோதே இவ்வாறு தெரிவித்தார். ▷02

## இளம் ஆசிரியர் சுட்டுக்கொலை

(கொழும்பு)

தனியார் கல்வி நிலையத்தில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர் ஒருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் அநுராதபுரம், தலாவை பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

அதேபிரதேசத்தைச் ▷15

# ராஜபக்ஷக்களை தூக்கிலிட வேண்டும்

## எதிர்க்கட்சியினர் கூட்டாக வலியுறுத்து

(கொழும்பு)

**இலங்கையின் பொருளாதாரத்தைச் சிரழித்த ராஜபக்ஷக்களையும் அவர்களின் சகாக்களையும் தூக்கிலிட வேண்டும் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் கூட்டாக வலியுறுத்தியுள்ளனர்.**

"நாட்டில் பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தி நாட்டைச் சீரழித்தவர்கள் ராஜபக்ஷக்கள் என்று உயர் நீதிமன்றம் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பு வழங்கியுள்ளது. இதை நாம் வரவேற்கின்றோம்.

ஆனால், இந்தத் தீர்ப்புக்கு மதிப்பளிக்காத மகிந்த ராஜபக்ஷ, நல்லாட்சி அரசில் இருந்த தற்போதைய ஐக்கிய மக்கள் சக்தியினரே நாட்டைச் சீரழித்தவர்கள் என்று வெட்கம் இல்லாமல் கூறியுள்ளார்.

நாட்டின் பொருளாதாரச் சீரழிவுக்குக் காரணமானவர்கள் என்று உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கமைய ராஜபக்ஷக்களினதும் அவரின் சகாக்களினதும் குடியுரிமையைப் பறிக்க வேண்டும். அவர்களிடமிருந்து நாட்டை மீட்டெடுக்க வேண்டுமென

லக்ஷ்மன் கிரி ▷15

### இந்திய அரசு அழுத்தம்

## பருத்தித்துறையில் கைதான 22 தமிழக மீனவர்களும்

### நல்லிணக்க அடிப்படையில் உடன் விடுதலை

(யாழ்ப்பாணம்)

இந்தியமத்தியநிதி அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க கடற்படையினரால் பருததித்துறை கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த 22 மீனவர்களும் இரண்டு படகுகளுடன் நல்லெண்ண அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டனர்.

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டதாக ▷15

### உணவகத்தில் முரண்பாடு

## உரும்பிராயில் ஒருவர் அடித்துப் படுகொலை



(யாழ்ப்பாணம்)

உணவகத்தில் ஏற்பட்ட முரண்பாட்டையடுத்து உரும்பிராயில் ஒருவர் அடித்துப்படுகொலை செய்யப்பட்டுள்ளார் ▷15

## கொழும்பை வந்தடைந்த பிரம்மாண்ட கப்பல்




▷15

## ஆனந்த மழையில் அவுஸ்திரேலியா

### ஆறாவது முறையாக கிண்ணம் வென்று அசத்தல்



▷04

ලකී Lucky 7 லக்கி

124 ஆவது சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூபாய் ஒரு கோடியே இருபத்தைந்து இலட்சம்
(C-2168)

வெற்றி
கந்தப்பொலவுக்கு
லொத்தர் சீட்டை விற்பனை செய்தவர்
திரு.திவங்க ஜயரத்ன
வெற்றியாளருக்கு எங்களது வாழ்த்துக்கள்

அடுத்த கோடீஸ்வரர் நீங்களாக இருக்கலாம்! இன்றே வாங்கிடுங்கள்

உங்களுடைய டிக்கட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீரற்ற காலநிலையால்
# வலி. வடக்கில் முகாம்களில் வசிக்கும் மக்கள் கடும் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த ஒரு வார காலத்திற்கு மேலாக நீடித்து வரும் சீரற்ற காலநிலை காரணமாக யாழ்ப்பாணம் வலி வடக்கு பகுதியில் 33 வருடங்களாக தற்காலிக முகாம்களில் வசித்து வரும் குடும்பங்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன.

குறித்த முகாம்களில் வசிக்கும் பல குடும்பங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் அக்குடும்பங்கள் வசிக்கும் பகுதிக்கு அருகாமையில் உள்ள பலர் டெங்கு தாக்கத்திற்கும் உள்ளாகியுள்ளனர்.

குறித்த முகாம்கள் தொடர்ச்சியாக ஒவ்வொரு மழைக்காலங்களிலும் வெள்ள பாதிப்புக்கு உள்ளாகி வரும் நிலையில் சில மக்களுக்கு காணிகள் தமது சொந்த நிலங்களை விட வேறு பகுதிகளில் வழங்கப்பட்ட போதிலும் வீடுகளை அமைப்பதற்கு அரசாங்கத்தால் இதுவரை எந்த நிதியும் ஒதுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதனால் புதிய இடங்களுக்கு செல்ல முடியாத நிலையில் குறித்த மக்கள் அகதி முகாம்களில் வாழ்ந்து வருகின்றனர்.

இவ்வாறான நிலையில் வெள்ளப் பாதிப்பை எதிர்கொள்வதற்கான ஏற்பாடுகளை செய்து தருமாறு உரிய தரப்பினரிடம் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-7)

# சுகாதார அமைச்சுக்கு புதிய செயலாளர்

(கொழும்பு)

சுகாதார அமைச்சின் செயலாளராக விசேட வைத்திய நிபுணர் பாலித மஹிபால நியமிக்கப்பட்டுள்ளார்.

சுகாதார அமைச்சின் செயலாளர் ஜனக்க சந்திரகுப்த ஓய்வுபெறவுள்ள நிலையில், இந்த புதிய நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

விசேட வைத்திய நிபுணர் பாலித மஹிபால, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகமாக சில காலம் செயற்பட்டிருந்தார்.

பின்னர் உலக சுகாதார ஸ்தாபனத்தின் உயர் பதவிகளிலும் அவர் செயற்பட்டிருந்தார்.

இந்த நிலையில், சுகாதார அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள விசேட வைத்திய நிபுணர் பாலித மஹிபால, இன்று திங்கட்கிழமை தமது கடமைகளை பொறுப்பேற்கவுள்ளார். (ம-7)


## கொக்குத்...

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

அகழ்வு பணி இன்று காலை 8 மணியளவில் ஆரம்பித்து தொடர்ச்சியாக இடம்பெறவுள்ளது. புதை குழிக்குள் நீர் தேங்காதவாறு போடப்பட்டுள்ள கொட்டகையானது மேலும் 10 அடிக்கு நீட்டப்பட்டுள்ளது.

இம்முறை அகழ்வுபணி நடைபெறும் போது ராடர் கருவியை பாதுகாப்பு அனுமதியை பெற்று பரீட்சித்து பார்க்க எதிர்பார்த்துள்ளோம். இதன் மூலம் எவ்வளவு தூரத்திற்கு குறித்த புதைகுழியானது உள்ளது என அடையாளப்படுத்தி கொள்ள கூடியதாக இருக்கும்.

நீதிமன்ற கூற்றுப்படி 2.5 மில்லியன் வரையிலான நிதி உள்ளது அவ் நிதி இரண்டு வாரங்களுக்கு அகழ்வுபணி மற்றும் ஏனைய பணிகளை மேற்கொள்ள போதுமானதாக இருக்கும் என்றார். (ம-7,299)



நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த கந்தசஷ்டி உற்சவம் தனில் நிறைவாக நேற்று திருக்கல்யான வைபவம் இடம்பெற்றது இதில் ஆறுமுகப் பெருமான் கஜவல்லி, மகாவல்லி சமேதராய் திருமண கோலத்தில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.

# கோப்பாய் துயிலும் இல்லம் முன் சிரமதானப் பணி



(யாழ்ப்பாணம்)

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு முன்பாக நேற்று சிரமதானப்பணி முன்னெடுக்கப்பட்டது.

தமிழ் மக்களுக்கான உரிமைப் போரில் தமது உயிர்களை ஈகம் செய்த மாவீரர்களை போற்றி வணங்கும் மாவீரர் நாள் இவ்வாண்டும் கார்த்திகை 27 ம் திகதி தமிழ் மக்களால் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

நாட்டுக்காக உயிர்த்தியாகம் செய்த தமது உறவுகளை நினைந்து வருடம்தோறும் கார்த்திகை 27 மாவீரர் நாள் நிகழ்வுகள் தமிழர்கள் வாழும் தேசமெங்கும் அனுஷ்டிக்கப்படும்.

மாவீரர் வாரம் ஆரம்பிக்கவுள்ள நிலையில் மாவீரர் துயிலும் இல்லங்களில் சிரமதான பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் நேற்றைய தினம் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு முன்பாக துப்பரவாக்கல் பணிகள் முன்னெடுக்கப்பட்டது.

இந்த சிரமதானப் பணிகளை தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் இணைந்து மேற்கொண்டனர். (ம-7)


யா/மகாஜனக் கல்லூரி,
தெல்லிப்பழை
தரம் - 6 அனுமதி - 2024
(தமிழ்/ஆங்கில மொழி மூலம்)

2024 ஆம் ஆண்டு தரம் 6 இல் கல்வி கற்பதற்காக புலமைப்பரிசில் பரீட்சையில் 120 புள்ளிக்கு மேல் பெற்ற மாணவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அலுவலக நேரத்தில் விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

முடிவுத்திகதி : 10.12.2023

(C-7678) அதிபர்




கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின்
ஆரம்பப்பிரிவு ஆசிரியை
திருமதி
சிறிகணேசராசா கம்சவதனி
அவர்களின் பாசமிகு மகனார்
அமரர்
சிறிகணேசராசா நிசாந்தன்

தோற்றம் : 10.05.1990
மறைவு : 18.11.2023

அவர்களின் திடீர் மறைவு குறித்து எமது பாடசாலைச் சமூகம் ஆழ்ந்த துயரம் அடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவுத் துயரில்
ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
யா/ நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயம்
யாழ்ப்பாணம்
(17940)



7ஆம் ஆண்டு
நீங்கா நினைவுகளில்...
அமரர் நாகலிங்கம் புவனேந்திரன்



தோற்றம் : 25.02.1950
மறைவு : 07.12.2016

திதி : பூர்வபக்க அட்டமி

அன்பின் உருவமாய்
பண்பின் சிகரமாய் உயர்ந்து
ஆலமர விருட்சமாய் நிழல் தந்து
பாசமுடன் எமையெல்லாம் வளர்த்து
கூடியிருந்த நாட்கள் ஒவ்வொன்றும்
குதூகலமாய் இருந்து விட்டு
எமையெல்லாம் பரிதவிக்கவிட்டு
எங்கு சென்றீர் ஏழாண்டு
கடந்து சென்றதப்பா நீர் சென்று
ஆறுமோ எம் துயர்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(17924)

முருகமூர்த்தி வீதி, நெல்லியடி.
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பேறாமக்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜபக்ஷக்களிடமிருந்து நட்டஈட்டை பெறுவதற்கான சட்ட நடவழிக்கை குறித்து ஆராய்வு

**(கொழும்பு)**

**பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட சாதாரண மக்களுக்கு பொறுப்புக்கூற வேண்டியவர்களிடத்தில் இருந்து நட்டஈட்டைப் பெறுவதற்கான சட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பது பற்றி ஆராயப்படுகின்றது.**

நாட்டின் முறையற்ற பொருளாதார முகாமைத்துவத்திற்கும் சீரற்ற நிதி நிர்வாகத்திற்கும் ராஜபக்ஷ குடும்பத்தினரும் அவர்களது சகாக்களும் காரணமாக இருப்பதும் அவர்கள் அதற்கான பொறுப்பினை கூறவேண்டுமெனவும் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ள நிலையில் சாதாரண மக்களுக்கான நட்ட ஈட்டைப் பெற்றுக் கொடுப்பதற்காக சட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பது சம்பந்தமாக ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் எம்.பி தலைமையில் எதிர்க்கட்சிகளின் சட்டத்தரணிகள் ஆராய்ந்து வருகின்றனர்.

முன்னதாக, நாட்டின் முறையற்ற பொருளாதார முகாமைத்துவத்திற்கும் சீரற்ற நிதி நிர்வாகத்திற்கும் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, முன்னாள் பிரதமர், நிதி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ, பஷில் ராஜபக்ஷ, மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர்களான அஜித் நிவாட் கப்ரால், டபுள்யூ.யு.டி. லக்ஷ்மன், நிதி அமைச்சின் முன்னாள் செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகல, முன்னாள் ஜனாதிபதி செயலர் பி.பீ. ஜயசுந்தர மத்திய வங்கியின் நிதிச்சபை ஆகிய தரப்புக்கள் "பொறுப்புக்கூற வேண்டும்" என்று உயர்நீதிமன்றில் தொடரப்பட்ட அடிப்படை உரிமை மீறல் வழக்கு தொடர்பில் தீர்ப்பளிக்கப்பட்டது.

இதுதொடர்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவிக்கையில்,

நாட்டை பொருளாதார ரீதியாக சீரழித்தமைக்காக பொறுப்புக்கூற வேண்டியவர்களாக ராஜபக்ஷக்கள் உயர் நீதிமன்றத்தினால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளமையானது மிகவும் முக்கியமான விடயமாகும்.

ஆனால் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பில் பொறுப்புக்கூற வேண்டியவர்கள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள், அவர்களிடமிருந்து நட்ட ஈட்டைப் பெற்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குதல் சம்பந்தமாக எவ்விதமான உத்தரவுகளும் விடுக்கப்படவில்லை.

இருப்பினும், பொறுப்புக்கூறலில் இருந்து விலகியமையால், அதற்கான இழப்பீட்டை பாதிக்கப்பட்ட மக்களுக்குச் செலுத்த வேண்டும் என்பதற்கான உயர் நீதிமன்றம் ஏற்கனவே முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிரான வழக்கில் தீர்ப்பளித்துள்ளது.

அந்த வழக்கின் தீர்ப்பினை அடிப்படையாகக் கொண்டு எனது தலைமையில் ஏனைய எதிர்க்கட்சிகளின் சட்டத்தரணிகள் மற்றும் சிவில் தரப்பினர் உள்ளிட்டவர்களுடன் ராஜபக்ஷக்களிடத்திலிருந்து நட்ட ஈட்டைப் பெறுவதற்கான சட்ட நடவடிக்களை அடுத்து வரும் காலத்தில் முன்னெடுப்பது பற்றி ஆராய்ந்து வருகின்றோம்.

விசேடமாக, ராஜபக்ஷக்களைப் பொறுத்தவரையில் 22 மில்லியன் மக்களுக்கும் நட்டஈடு வழங்குமளவிற்கு நாட்டுக்கு வெளியில் போதுமான பணம் இருக்கின்றது. அதற்கான சான்றதாரங்களும் காணப்படுகின்றன.

அதனடிப்படையில் ராஜபக்ஷ சகோதரர்கள் நாட்டிற்கு வெளியே வைத்திருக்கும் பணத்தில் இருந்து நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க முடியும்.

நாட்டிற்கு வெளியே வைத்துள்ள அனைத்து பணத்தையும் மீண்டும் கொண்டு வர முடியும். அந்த பணத்தில் தான் நாட்டின் பொருளாதாரத்தையும் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணத்தினையும் வழங்க முடியும் என்பதே எமது சட்ட நடவடிக்கைக்கான முயற்சியின் நோக்கமாகவுள்ளது என அவர் தெரிவித்தார். (நி-5)

# நாட்டை வங்குரோத்தாக்கியது நாங்களல்ல; நல்லாட்சி அரசே

## மகிந்த குற்றச்சாட்டு

(கொழும்பு)

"நாட்டை வங்குரோத்து நிலைக்குள்ளாக்கியது நாம் அல்லர். அன்றைய நல்லாட்சி அரசுக்குப் பங்காற்றிய தற்போதைய ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர்களே காரணம்."

இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்ஷ குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக சிங்கள வார இதழ் ஒன்றுக்கு அவர் வழங்கிய நேர்காணலில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"2015 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் நான் தோல்வியடைந்த போது நாட்டின் பொருளாதார வளர்ச்சி விகிதம் 7 வீதமாக இருந்தது.

ஆனால், நல்லாட்சி அரசின் பின்னர் 2020 ஆம் ஆண்டு மீண்டும் நாட்டைக் கைப்பற்றிய போது பொருளாதார வளர்ச்சி வீதத்தை 2 வீதமாகக் குறைத்தது ராஜபக்ஷக்களா?

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை நான் மதிக்கின்றேன். 2019 இல் தெரிவு செய்யப்பட்ட கோட்டாபயவின் அரசு தேர்தல் விஞ்ஞாபனத்தில் வரிகளைக் குறைப்பதாக உறுதியளித்திருந்தது. எமக்கு வழங்கப்பட்ட ஆணையின்படி செயற்பட்டு வரிகளை குறைப்பது எவ்வாறு பிழையானது?.

அரசாங்கத்தின் கொள்கை முடிவினால்தான் சர்வதேச நாணய நிதியத்துக்குச் செல்ல வேண்டியதாகிவிட்டது. அதற்காக அவர்களின் வேலைத் திட்டத்தில் நாம் இணைந்து கொள்ளவில்லை.

வற் உள்ளிட்ட வரி குறைப்புக்கு எதிராக நீதிமன்றம் சென்ற கல்விமான்கள் நிதித் துறையின் நிதிப் பரிந்துரைகளின் பேரில் தற்போதைய அரசுக்கு எதிராக வீதிகளில் ஊர்வலம் நடத்தியதுதான் இங்கு வேடிக்கை எனத் தெரிவித்தார். (நி-5)

# மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் பட்ஜெட்டை சமர்ப்பித்துள்ளோம் -ஜனாதிபதி

(டில்லி)

வரலாற்றில் மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் வேளையிலும் நாட்டு மக்களின் நலிவடைந்த வாழ்வாதாரத்தை மேம்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தி அடுத்த வருடத்துக்கான வரவு- செலவுத் திட்டத்தை அரசாங்கம் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நிகழ்நிலை முறையில் "உலக தெற்கின் குரல்" அரச தலைவர்கள் மாநாட்டில் கலந்து கொண்டு கடந்த வெள்ளிக்கிழமை ஆற்றிய உரையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த மாநாடு இரண்டாவது முறையாக இந்திய பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் இந்தியாவில் ஆரம்பமானது. அபிவிருத்தி அடைந்து வரும் பல நாடுகளின் தலைவர்கள் இந்த மாநாட்டில் கலந்து கொண்டனர்.

மாநாட்டில் பங்கேற்குமாறு அழைப்பு விடுத்தமைக்கு பிரதமர் நரேந்திர மோடிக்கு நன்றி தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்த மாநாட்டை ஏற்பாடு செய்தமைக்காக இந்தியாவுக்கு பாராட்டு தெரிவித்தார்.

முதல் முறையாக நடைபெற்ற "உலக தெற்கின் குரல்" மாநாட்டின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியாவின் தலைமைத்துவத்தையும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் முன்னுரிமைகள் தொடர்பில் சர்வதேசத்தின் கவனத்தை ஈர்ப்பதால் கிடைக்கக்கூடிய முன்னேற்றகரமான தாக்கத்தையும் வரவேற்றார்.

இலங்கையின் பொருளாதார முன்னேற்றம் தொடர்பில் விளக்கமளித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து முதலாம் தவணைக் கடனைப் பெற்றுக் கொண்டமை மற்றும் இலங்கையின் இரு தரப்புக் கடன் தொடர்பாக உத்தியோக பூர்வ கடன் வழங்குநர்கள் குழுவினால் அடைந்த முன்னேற்றங்கள் தொடர்பிலும் சுட்டிக்காட்டினார்.

படுகடன் தொடர்பிலான பிரச்சினைகளின் கடினத்தன்மையை சுட்டிக் காட்டிய ஜனாதிபதி, அதற்கான நிலையான தீர்வுகளை காண கடன் வழங்குநர்கள் மற்றும் சர்வதேச நிதி நிறுவனங்களுக்கும் இடையில் ஒத்துழைப்பை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

எதிர்காலத்தை கருத்தில் கொண்டு நீண்டகால வளர்ச்சிக்கான வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பது. உறவுகளை மேம்படுத்துவதன் அவசியம் தொடர்பிலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார். (நி-5)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இந்தியாவை சொந்த மண்ணில் வீழ்த்தி 6வது முறையாக சம்பியனானது அவுஸ்திரேலியா



## ஆட்டநாயகனாக சதம் அடித்த ட்ரவிஸ் ஹெட்



பாரத மண்ணில் நடைபெற்று வந்த 13ஆவது உலகக் கிண்ண கிரிக்கெட் அத்தியாயத்தில் சம்பியனான அவுஸ்திரேலியா 6ஆவது தடவையாக உலகக் கிண்ணத்தை சுவீகரித்து வரலாறு படைத்தது.

சம்பயினான அணிக்கு இலங்கை நாணயப்படி 131 கோடி ரூபா பணப்பரிசும் சொந்தமானது. இரண்டாம் இடத்தைப் பெற்ற அணிக்கு 65 கோடி ரூபா கிடைத்தது.

அலன் போர்டர், ஸ்டீவ், ரிக்கி பொன்டிங் (2 தடவைகள்), மைக்கல் க்ளார்க் ஆகியோரைப் பின்பற்றி இப்போது அவுஸ்திரேலியாவை உலக சம்பியனாக பெட் கமின்ஸ் வழிநடத்தியுள்ளார்.

அத்துடன் இந்த வருட மத்தியில் நடைபெற்ற உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டியிலும் இந்தியாவை அவுஸ்திரேலியா வெற்றிகொண்டு சம்பியனாகி இருந்தது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவினால் நிர்ணயிக்கப்பட்ட 241 ஓட்டங்கள் என்ற சுமாரான வெற்றி இலக்கை நோக்கிப் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா 43 ஓவர்களில் 4 விக்கெட்களை இழந்து 241 ஓட்டங்களைப் பெற்று உலக சம்பியனானது.

அப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா 50 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 240 ஓட்டங்களைப் பெற்றது.

இந்த உலகக் கிண்ண சுற்றுப் போட்டியில் அரை இறுதிவரை அமோகமான ஆட்டத்திறனை வெளிப்படுத்திவந்த இந்தியா, ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட இரசிகர்கள் முன்னிலையில் அழுத்தத்துக்கு மத்தியில் விளையாடியதை அவதானிக்க முடிந்தது.

இந்தியா சார்பாக ரோஹித் ஷர்மா (47), விராட் கோலி (54), கே.எல். ராகுல் (66) ஆகிய மூவரே 45 ஓட்டங்களுக்கு மேல் பெற்றனர். அவர்களில் ரோஹித் ஷர்மா மாத்திரமே வேகமாக ஓட்டங்களைப் பெற்றார். அத்து டன் அவர் மாத்திரமே 3 சிக்ஸ்களை விளாசியிருந்தார்.

இந்திய இன்னிங்ஸில் 13 பவுண்டறிகளே அடங்கியிருந்தன.

பந்துவீச்சில் மிச்செல் ஸ்டாக் 55 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும் பெட் கமின்ஸ் 34 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் ஜொஷ் ஹேஸல்வூட் 60 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.



241 ஓட்டங்கள் என்ற சுமாரான வெற்றி இலக்கை நோக்கிப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியாவின் ஆரம்பமும் சிறப்பாக அமையவில்லை.

இந்தியா 240 ஓட்டங்களுக்கு கட்டுப்படுத்தப்பட்டதால் சோர்வடைந்திருந்த இரசிகர்கள், அவுஸ்திரேலியாவின் முதல் 3 விக்கெட்டுகள் வீழ்த்தப்பட்டதும் உயிர் பெற்று இந்திய அணிக்கு ஆரவாரம் செய்து உற்சாகம் ஊட்டினர்.

டேவிட் வோர்னர் (7), மிச்செல் மார்ஷ் (27), ஸ்டீவன் ஸ்மித் (15) ஆகிய மூவரும் வேகமாக ஓட்டங்களைப் பெற முயற்சித்து விரைவாகவே ஆட்டம் இழந்தனர். (47 - 3 விக்.)

எனினும் ட்ரவிஸ் ஹெட், மானுஸ் லபுஷேன் ஆகிய இருவரும் 4ஆவது விக்கெட்டில் 192 ஓட்டங்களைப் பகிர்ந்து அவுஸ்திரேலியாவின் வெற்றியை உறுதி செய்தனர்.

120 பந்துகளை எதிர்கொண்ட ட்ரவிஸ் ஹெட் 15 பவுண்டறிகள், 4 சிக்ஸ்கள் உட்பட 137 ஓட்டங்களைக் குவித்தார். அவருக்கு பக்கபலமாக மிகுந்த நிதானத்துடன் துடுப்பெடுத்தாடிய மானுஸ் லபுஷேன் 58 ஓட்டங்களுடன் ஆட்டம் இழக்காதிருந்தார்.

பந்துவீச்சில் ஜஸ்ப்ரிட் பும்ரா 43 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் மொஹமத் ஷமி 47 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டை யும் மொஹமத் சிராஜ் 45 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக ட்ரவிஸ் ஹெட்டும் தொடர் நாயகனாக விராட் ஹோலியும் தெரிவாகினர்.

(ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி நகராட்சி மன்றம்
# 2024 ஆம் ஆண்டுக்கான மீள்கேள்வி அறிவித்தல்

**சாவகச்சேரி நகராட்சி மன்ற அதிகார எல்லைக்குட்பட்ட கீழ் குறிப்பிடப்படுகின்ற வாகனத் தரிப்பிடம் மற்றும் இறைச்சிக் கடைகளை 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்விகள் கோரப்படுகின்றது.**

01. கேள்விப் பத்திரங்களை கீழ்க்குறிப்பிட்ட மீளளிக்கப்படாத படிவக்கட்டணம், மீளளிக்கப்படக்கூடிய வைப்புப்பணம் என்பவற்றை செலுத்தி நகராட்சி மன்ற அலுவலகத்தில் 20.11.2023 தொடக்கம் 04.12.2023 ஆம் திகதி வரையான அலுவலக நாட்களில் மு.ப 09.30 - பி.ப 2.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம். கேள்விப்பத்திரங்களை பெறுபவர் தமது தேசிய அடையாள அட்டையுடன் அதன் போட்டோ பிரதியையும் கிராமசேவகரினால் வழங்கப்பட்டு பிரதேச செயலரினால் மேலொப்பமிடப்பட்ட வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி : 05.12.2023 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணி.
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி : 05.12.2023ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணி

02. கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் பூர்த்தி செய்யப்பட்டு தனித்தனியாக மூலப்பிரதி,இணைப்பிரதி என இரு உறைகளில் வைத்து செயலாளர், நகராட்சி மன்றம், சாவகச்சேரி என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக குறிப்பிடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடுதல் வேண்டும். 05.12.2023 முற்பகல் 10.00 மணிக்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

03. எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரமுண்டு.

04. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுநராக பட்டியலிடப்பட்டவர்களுக்கு கேள்விப் படிவம் வழங்கப் படமாட்டாது என்பதுடன் படிவம் வழங்கப்பட்ட பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படும்.

05. ஏற்றுக்கொள்ளக்கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்படமாட்டாது.

06. கேள்விகள் திறக்கப்படும் அத்தருணம் கேள்விதாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.

07. தெரிவு செய்யப்படும் கேள்விதாரர்-தாங்கள் தெரிவு செய்யப்பட்டமை தொடர்பாக அறிவிக்கப்பட்ட கடிதத்திகதியிலிருந்து 07 நாட்களுக்குள் கேள்வித் தொகையின் 1/3 பகுதியை செலுத்தி சபையுடன் நிபந்தனைகளை உள்ளடக்கிய ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொள்ள வேண்டும்.

08. கேள்வி தொடர்பான மேலதிக விபரங்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**2024 ஆம் ஆண்டு வாகனத்தரிப்பிடம் மற்றும் இறைச்சிக்கடைகளுக்கான குத்தகை அட்டவணை**

| இல | குத்தகை விபரம் (01.01.2024-31.12.2024) | ஆகக்குறைந்த மீள்கேள்வித்தொகை (இதரவரிகள் தவிர) | மீள்கேள்வி வைப்புப் பணம் (மீளளிக்கக் கூடிய) | கேள்விப்படிவக் கட்டணம் (இதர வரிகள் தவிர) (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|
| 02. | வாகனத்தரிப்பிடம் | 750,000.00 | 7,500.00 | 2,000.00 |
| 04. | ஆட்டிறைச்சிக் கடை இல : 01 | 365,100.00 | 4,000.00 | 2,000.00 |
| 05. | மாட்டிறைச்சிக் கடை இல : 01 | 1,561,000.00 | 15,700.00 | 2,000.00 |
| 06. | மாட்டிறைச்சிக் கடை இல : 02 | 1,561,000.00 | 15,700.00 | 2,000.00 |

குறிப்பு: இந்நகராட்சி மன்றத்தின் இறைச்சிக்கடைகளிலிருந்து 1/2Km சுற்று வட்டத்திற்குள் தனியார் எவரும் இறைச்சி, விற்பனை செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள்.

2023.11.20 **செயலாளர், நகராட்சி மன்றம், சாவகச்சேரி.** (சி-7672)

# இணைப்பாடவிதான செயற்பாடுகளில் மாணவர்களை ஊக்கப்படுத்துங்கள்
## வடமாகாண ஆளுநர் சார்ள்ஸ்



(யாழ்ப்பாணம்)

இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் மாணவர்களை ஊக்கப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு வட மாகாண அதிபர்கள் சங்கத்திடம், வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் உத்தரவிட்டுள்ளார்.

இதன்போது "வட மாகாணத்தில் அதிகரித்துள்ள பாடசாலை இடைவிலகல், பிரத்தியேக வகுப்புகளுக்கு அதிக நேரத்தை செலவிடுதல், இணைபாடவிதான செயற்பாடுகளில் மாணவர்களின் பங்களிப்பு குறைந்து செல்லுதல் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் தனது கவலையை வெளியிட்ட ஆளுநர், இவ்விடயங்களை மாற்றியமைக்க வேண்டும்" எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும் மாணவர்கள் மீது அதிக அழுத்தங்களை பிரயோகிப்பதால் உள ரீதியாக மாணவர்கள் பாதிக்கப்படுவதாகவும், வாழ்கையின் அடுத்த நகர்விற்கு அது இடையூறாக அமைவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்நிலையில் ஆளுநரின் ஆலோசனைகளை முழுமையாக ஏற்றுக் கொள்வதாக தெரிவித்த வட மாகாண அதிபர்கள் சங்கம், இவற்றை நடைமுறைப்படுத்துவது தொடர்பிலும் நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்துள்ளனர்.

அத்துடன் வட மாகாண கல்வி மேம்பாட்டை முன்னெடுப்பதற்கு தேவையான 19 அம்சக்கோரிக்கைகள் அடங்கிய மனு ஒன்றையும் ஆளுநரிடம் கையளித்துள்ளனர். (நி-5-33)



யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி தரம் ஏழு மாணவி செல்வி. அன்கா அன்ரன் கௌரிதாசன் தேசிய மட்ட ஆங்கில தின கவிதை நயத்தல் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தைப் பெற்றுள்ளார்.

# இராசிபலன்

**20.11.2023**
**கார்த்திகை 04, திங்கட்கிழமை**
**அட்டமி பின்னிரவு 3.32 மணிவரை**
**அவிட்டம் முன்னிரவு 10.16 மணிவரை**

**சுபநேரம் -12.09-1.39 மணிவரை**
**இராகுகாலம்-7.39-9.09 மணிவரை**

**சந்திராஷ்டமம்-புநர்பூசம்,பூசம்.**

**வளவன்**


**மேஷம்**
எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம்,குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம் பெறலாம்.


**ரிஷபம்**
வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள், புதிய முயற்சிகள் கைகூடும், தொலைபேசித் தகவல்கள் மகிழ்ச்சி தரும்,எடுத்த காரியத்தில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.


**மிதுனம்**
உங்களின் கடின உழைப்பை மற்றவர்கள் வியப்பாக பார்ப்பர், தொழிலில் ஏற்பட்ட குழப்பங்கள் அகலும், பெரிய மனிதர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம்.


**கடகம்**
மகிழ்ச்சி குறையாதிருக்க மற்றவரை அனுசரித்துச் செல்வது நல்லது, வழிபாட்டால் மகத்துவம் காணவேண்டிய நாள், உதவுவதாகச் சொன்னவர்கள் உங்களைவிட்டு விலகலாம்.


**சிம்மம்**
சந்தித்த நண்பர்களால் சந்தோசம் கிடைக்கும், உடல் நலன் சீராகி உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், போசன சுகமுண்டு, காரிய அனுகூலமுண்டு.


**கன்னி**
கூட்டு முயற்சிகள் வெற்றி தரும், குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், மருத்துவச் செலவுகள் குறையும், நிலையான வருமானத்திற்கு வழிகிடைக்கும்.


**துலாம்**
எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வியாபார விருத்தியுண்டு,புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும்.


**விருச்சிகம்**
வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், இல்லத்தில் சுப செய்திகள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு -பொழுதுபோக்குகளில் ஆர்வம் கூடும்.


**தனுசு**
மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், உறவினர்கள் அனுசரணையாக நடந்து கொள்வர்.


**மகரம்**
தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், பக்குவமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், பொருளாதார நிலையில் திருப்தி காணும் நாள்.


**கும்பம்**
உடல் நலனில் கவனம் தேவை, வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், போசன சுகமுண்டு, கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.


**மீனம்**
எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**தகுதியற்றவர்களைப் பார்த்து இரங்காதே அது உனக்கு கேடு விளைவிக்கும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போலி அனுமதிப் பத்திரங்கள் தொடர்பில் இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

போலி மணல் ஏற்றும் அனுமதிப்பத்திரங்களைப் பயன்படுத்திய குற்றச்சாட்டில் கிளிநொச்சியைச் சேர்ந்த இருவர் யாழ்.மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மணல் அனுமதிப்பத்திரம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் அந்தப் பத்திரம் போலியானது என்று கண்டறியப்பட்டிருந்தது. விசாரணையின் அடிப்படையில் கிளிநொச்சி மற்றும் விசுவமடுவைச்சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

போலியான அனுமதிப் பத்திரம் என்று தெரிந்தும் அதை ஒருவருக்கு வழங்கியமை, அதைப் பயன்படுத்தியமை ஆகிய குற்றச் சாட்டுக்களின் கீழ் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

போலியான அனுமதிப்பத்திரம் ஒன்றுக்காக சுமார் 15 ஆயிரம் ரூபா வரையில் அறவிடப்பட்டுள்ளமை விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (நி-5-33)



தேசிய மட்ட "நாட்டார் பாடல்" போட்டியில் யா/கட்டைவேலி விநாயகர் வித்தியாலய மாணவர்கள் முதலாமிடத்தை பெற்றுள்ளனர்.

(படம்- மகாலிங்கம்)

# புலமைப்பரிசில் பரீட்சை - 2023 சித்தியடைந்தோர் விபரம்

**யா/சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை**

ய. யனுசன்-186,சு. பங்கஜன்-183, பா.அம்ஷிக்- 181, ச. பிருந்திகன்- 180,கெ. கோஜனன்- 179,ம. சிருஷ்டிகன்-176, ம. அக்சயன்-176,நி. அஸ்னிகா- 173,அ. அக்ஷயன்- 170, க.யதுசன்- 169,வி. ஆய்ஷன்-167,ர. ஷகீன்- 167, ஜெ.கிரிகா- 167,பி. கேனுஷாந்-166,வி. டஷிகா-165, ச. ஆர்த்தனா -163, ம. நேருஜன்- 163,க. அஷ்விகன்-161, பி. தருஷப்ரமோத்- 161, ப. கிருஷ்னி- 160,அ. யபிஷனன்-159, சி.சௌமிகா-158,தி.அபிராமி- 157,ஜீ. ஆரூரன்- 157, க. மகினன்-156,ஜெ. சௌமியா-156,செ. அபிஷாந் -154, த. அபிவர்சனா-153,ந. மிதுசாளினி-152,வ. சாம்பவி-152, பி. அஷ்வினா-152,ஜெ. அஸ்வின்-150,அ. திஸ்யா-150, உ. லிதுர்ஷனா-150,கா.சியானி-149,செ. அபிஷேக்-147, மு.திரிலோஜன்-147,க. அந்தோனியன்-146,தி. மிதுனா-145, க. அஸ்மிகா-145

**யா/இமையாணன் அ.த.க வித்தியாலயம், வல்வெட்டித்துறை**

உ.சஜானி-152, த.கரீஸ்-145

**யா/ கைதடி குருசாமி வித்தியாலயம்**

சி.புவிராஜ்-151, சி.தர்சிகா-150, ம. மதுர்ஷனா-147

# சாவகச்சேரி நகராட்சி மன்றம் பொன்விழா மண்டப மீள்கேள்வி அறிவித்தல்-2024

தலைவர், பெறுகைக் குழு, சாவகச்சேரி நகராட்சி மன்றத்தினால் பின்வரும் சேவைகளுக்காக 01.01.2024 தொடக்கம் 31.12.2024 வரையான காலப்பகுதிக்கு முத்திரையிடப்பட்ட கூறுவிலைகள் பொருத்தமான வழங்குநர்களிடமிருந்து கோரப்படுகின்றது.

பெறுகையின் பெயர், இல :-

1. பொன்விழா மண்டப நிகழ்வுகளிற்கு உணவு வழங்குநரை தெரிவு செய்தல் - NP/14/41(3)/ Town Hall/Food Supply/2024

பெறுகை இல (01) NP/14 /41(3)/Town Hall/Food Supply/ 2024

பொன்விழா மண்டப நிகழ்வுகளிற்கு உணவு வழங்குநரை தெரிவு செய்தல்.

நிபந்தனைகள் :-

1. உணவு வழங்குநர் வியாபாரப்பதிவு செய்திருப்பதுடன் வியாபார உரிமம் பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் சமையல் செய்து வழங்கும் பகுதியானது நகராட்சி மன்ற எல்லைக்குள் காணப்படல் வேண்டும்.
2. தாங்கள் உணவு தயாரிக்கும் மற்றும் களஞ்சியப்படுத்தும் இடத்தினை எமது பொது சுகாதார பரிசோதகர் அல்லது எம்மால் அனுமதியளிக்கப்படுகின்ற உத்தியோகத்தர் பார்வையிடுவதற்கு அனுமதியளிக்க வேண்டும்.
3. சமைய்ல் செய்யும் பகுதி மற்றும் சமையல் மேற்கொள்பவர்கள் சுத்தமாக இருப்பதுடன் சமையல் மேற்கொள்பவர்கள் மருத்துவசான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.
4. தங்களால் வழங்கப்படும் உணவு வகைகள் அனைத்தும் நகராட்சி மன்ற பொதுச்சுகாதார பரிசோதகரின் பரிசோதனைக்கு உட்படுத்தப்படும்.
5. தங்களால் தயாரிக்கப்படும் உணவு வகைகள் தொடர்ச்சியாக எப்போதும் சுவைமிக்கதாகவும் தரமுள்ளதாகவும் இருத்தல் வேண்டும்.
6. எங்கள் பணிப்பிற்கிணங்க எந்த உணவு வகைகளும் வழங்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்.
7. உரிய நேரத்திற்கு உணவு வகைகள் யாவும் தயாரித்து வழங்குதல் வேண்டும்.
8. தொழிற் தகைமை மற்றும் அனுபவச் சான்றிதழ்கள் இணைக்கப்படல் வேண்டும்.
9. தங்களிற்கு எமது மன்றத்தினால் வழங்கப்படும் உணவுக்கான கொடுப்பனவுத் தொகையிலிருந்து 12.5% தரகுப் பணமாக எம்மால் அறவிடப்படும்.
10. தாங்கள் பொன்விழா மண்டப நிகழ்வுகளுக்காக உணவு வழங்குதல் தொடர்பாக நகராட்சி மன்றத்தினூடாக மட்டுமே தொடர்புகளை மேற்கொள்வதுடன் எம்மால் குறிப்பிடப்படும் உணவுவகைகள் மற்றும் அளவுகள் மட்டுமே விநியோகம் செய்தல் வேண்டும்.

குறிப்பு :-

1. சாவகச்சேரி நகராட்சி மன்றத்தினால் வழங்கப்படும் கேள்விப்பத்திரங்களை மாத்திரம் சமர்ப்பித்தல் வேண்டும்.
2. கூறுவிலைப் பத்திரங்களை 20.11.2023 ஆம் திகதி மு.ப 09:30 இலிருந்து 04.12.2023 ஆம் திகதி பி.ப 2:30 மணி வரை மீளளிக்கப்படாத வைப்புப் பணம் ரூ 2,000.00 இனைச் செலுத்தி அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் நகராட்சி மன்றத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.
3. கூறுவிலைகள் 05.12.2023 பி.ப 2.30 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக "செயலாளர், நகராட்சி மன்றம், சாவகச்சேரி" எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பலாம். அல்லது அதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கூறுவிலைப் பெட்டியில் இடப்படுதல் வேண்டும்.
4. கூறுவிலை உள்ளடங்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பெறுகை இலக்கம் எழுதப்படல் வேண்டும்.
5. கூறுவிலைகள் 05.12.2023 பி.ப 2.30 மணிக்குத் திறக்கப்படும். அத்தருணம் வழங்குநரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.
6. தெரிவு செய்யப்படும் வழங்குநர்கள் சபையுடன் உடன்படிக்கை ஒன்றை மேற்கொள்ள வேண்டும்.
7. கேள்வி தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமை நகராட்சி மன்ற பெறுகைக்குழுவுக்கே உரியது.
8. மேலதிக விவரங்களுக்கு நேரடியாகவோ அல்லது தொ.பே.இலக்கம் 021-2270963 மூலமோ தொடர்பு கொள்ளவும்.

**செயலாளர் ,**
**நகராட்சி மன்றம்,**
**சாவகச்சேரி.**
**20.11.2023**

(வி-7871)

# திருநர் விழிப்புணர்வு வாரம் யாழில் அனுஷ்டிப்பு




(யாழ்ப்பாணம்)

திருநர் விழிப்புணர்வு வாரத்தை முன்னிட்டு யாழ்ப்பாண நகரில் விழிப்புணர்வு நடைபயணமொன்று மேற்கொள்ளப்பட்டது.

யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையம் முன்பாக நேற்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் ஒன்று கூடியவர்கள் நகரை சுற்றி நடைபயணத்தில் ஈடுபட்டனர். இந்தச் சமூகத்தில் வாழ்கின்ற அனைவரும் சமூகப் பொறுப்புடையவர்கள் என்பதை வலியுறுத்துவதோடு திருநர் சமூகத்தினரை ஒடுக்குமுறைகளுக்கு உட்படுத்தாது வாழ்தலை நோக்கி ஒடுக்குமுறைகளுக்கு எதிராக குரல் கொடுப்போம், மனிதர்களை மனிதர்களாக மதிப்போம் என நடைபயணத்தில் பங்கேற்றவர்கள் வலியுறுத்தினர்.

திருநர்களுக்கு எதிரான ஒடுக்குமுறையால் உயிரிழந்தவர்களுக்கு இதன் போது மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. (நி-33-104)

# போதிய வைத்தியர்கள் இன்மையால் சிரமங்களை எதிர்கொள்ளும் மக்கள்

## ஆளணிகளை அதிகரிக்குமாறு கிளி. மக்கள் கோரிக்கை

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் மயக்க மருந்து நிபுணர், சத்திர சிகிச்சை நிபுணர் மற்றும் கதிரியக்க நிபுணர்கள் பற்றாக்குறை காரணமாக சனி, ஞாயிறு தினங்களில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படும் அவசர நோயாளர்கள் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் யாழ்.போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்படும் அவல நிலை காணப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கான போதிய ஆளணி வெற்றிடங்கள் நீண்டகாலமாக நிரப்பப்படாத நிலை காணப்படுகின்றது.

ஏ -9 நெடுஞ்சாலையின் மையப்பகுதியில் அமைந்துள்ள வைத்தியசாலையில் விபத்துக்களால் காயமடைவோர் அதிகளவில் அனுமதிக்கப்படுவதனால் மேற்படி வைத்திய நிபுணர்கள் பற்றாக்குறை காரணமாக பல்வேறு நெருக்கடிகள் எதிர்கொள்ளப்படுகின்றது. இவ்வாறு இந்த வைத்தியசாலையில் காணப்படும் வெற்றிடங்களை உடனடியாக நிரப்புவதற்கு மத்திய மாகாண அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரியுள்ளனர். (நி-5-315)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2024 மே மாதம் ஜனாதிபதித் தேர்தல் அரசாங்க உயர்மட்டம் அவதானம்

(கொழும்பு)

2024 ஆம் ஆண்டு மே மாதத்தில் ஜனாதிபதி தேர்தலை நடத்துவது தொடர்பில் அரசாங்கத்தின் உயர் மட்டத்தில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

எதிர்வரும் மே மாதத்தில் ஜனாதிபதி தேர்தலை நடத்தும் தீர்மானம் அறிவிக்கப்படுமாயின் ஐக்கிய தேசிய மக்கள் கூட்டணி என்ற பொதுக்கூட்டணியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யானைச் சின்னத்தில் போட்டியிடுவார் என அரசாங்கத்தின் உயர் மட்ட தகவல் மூலம் தெரியவந்துள்ளது.

இதே வேளை பாராளுமன்றம் மற்றும் ஜனாதிபதி தேர்தலுக்கான செலவீனங்கள் தொடர்பான அறிக்கையை தயாரிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் ஏற்கனவே அறிவித்திருந்தார்.


இதன் பிரகாரம் பாராளுமன்ற, ஜனாதிபதி, மாகா சபை மற்றும் உள்ளூராட்சிமன்றங்களுக்குமான தேர்தல்கள் குறித்து முழுமையான நிதி அறிக்கை அரசாங்கத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் பிரதி ஆணையாளர் எஸ்.அச்சுதன் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி மற்றும் பாராளுமன்ற தேர்தலை அடுத்த ஆண்டு நடாத்துவதற்கான தீர்மானத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வரவு - செலவு திட்ட உரையின் போது உத்தியோகப்பூர்வமாக அறிவித்திருந்தார்.

2024 வரவு - செலவு திட்டத்தின் மீதான வாக்கெடுப்புடன் தேர்தலை இலக்கு வைத்து கட்சித் தாவல்களும் அரசியல் மாற்றங்களும் இடம் பெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

வரவு - செலவு திட்டம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் ஜனாதிபதி தேர்தலுக்கான இறுதி தீர்மானத்தை அரசாங்கம் அறிவிக்கலாம் என்று அரசின் முக்கிய தகவல் மூலம் தெரியவந்துள்ளது.. (நி-5)

# 2023 உலகக்கிண்ண கிரிக்கெட்; கூகுள் வெளியிட்ட டூடுல்



(லண்டன்)

2023 ஆம் ஆண்டிற்கான உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டிக்காக நேற்று கூகுள் நிறுவனம் சிறப்பு கவன ஈர்ப்பு சித்திரத்தை (டூடுல்) வெளியிட்டுள்ளது. (நி-5)


## பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் 2024 ஆம் ஆண்டுக்கான பாதீடு மக்கள் பார்வைக்கு

1987 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரகாரம் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் 2024 ஆம் ஆண்டுக்கான பாதீட்டு வரைபு தயாரிக்கப்பட்டு 2023.11.20 ஆம் திகதியிலிருந்து 2023.12.03 ஆம் திகதிவரை அலுவலக நேரத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தலைமை அலுவலகம், உப அலுவலகங்கள், சபையின் நூலகங்கள், சனசமூக நிலையங்கள் மற்றும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகம் என்பவற்றில் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும் என்பதை அறியத்தருகின்றேன்.

**தயானந்தன் தர்சினி,**
**செயலாளர்,**
**பச்சிலைப்பள்ளி பிரதேச சபை,**
**பளை.**

(C-7669)


## படகு கவிழ்ந்ததில் 4 ஜப்பானியர்கள் மாயம்

(கொழும்பு)

கடலுக்குச் சென்ற படகு கவிழ்ந்ததில் ஜப்பானிய பிரஜை உட்பட நால்வர் காணாமல் போயுள்ளதாக குறித்த படகின் உரிமையாளரால் நேற்று அதிகாலை 3.30 மணியளவில் மாரவில பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

மாரவில, முகுதுகட்டுவ பிரதேசத்தில் நேற்று முன்தினம் 18 ஆம் திகதி மாலை 5.30 மணி யளவில் ஜப்பானியர் உட்பட 5 பேர் சிறிய டிங்கி படகில் கடலுக்குள் மீன்பிடிக்கும் போது மழை பெய்ததால் படகு கடலில் கவிழ்ந்தது.

இதன்போது படகில் இருந்த ஏனைய நான்கு பேரும் காணாமல் போயுள்ளதாக படகின் உரிமையாளர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். இந்நிலையில் கடற்படையினரின் உதவியுடன் காணாமல் போனவர்களை தேடும் நடவடிக்கையை முன்னெடுத்துள்ளதாக மாரவில பொலிஸார் தெரிவிக்கின்றனர். (நி-5)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 350 | 300 | 350 | 300 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 220 |
| பச்சைமிளகாய் | 600 | 450 | 500 | 500 |
| தக்காளி | 320 | 350 | 380 | 350 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 100 | 160 | 150 |
| கோவா | 300 | 250 | 300 | 400 |
| கரட் | 350 | 400 | 450 | 500 |
| பூசணி | 100 | 80 | 100 | 120 |
| புடோல் | 300 | 250 | 200 | 250 |
| வாழைக்காய் | 200 | 180 | 180 | 300 |
| சின்ன வெங்காயம் | 380 | 320 | 350 | 450 |
| பெரிய வெங்காயம் | 300 | 240 | 280 | 300 |
| பாகற்காய் | 600 | 1000 | 500 | 600 |
| வெண்டக்காய் | 250 | 200 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 140 | 300 |
| பயற்றங்காய் | 650 | 800 | 800 | 600 |
| லீக்ஸ் | 300 | 260 | 240 | 300 |
| பீற்றூட் | 250 | 200 | 200 | 300 |
| கறிமிளகாய் | 650 | 700 | 500 | 600 |
| முருங்கைக்காய் | 600 | 800 | 400 | 600 |
| போஞ்சி | 500 | 700 | 500 | 600 |
| கத்தரிதம்புள்ள | 300 | 250 | 350 | 280 |
| கீரை - 1 பிடி | 140 | 150 | 150 | 120 |
| தேசிக்காய் | 1400 | 1200 | 1400 | 1500 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 100 | 85 | 70-100 |
| இராசவள்ளி | 450 | 450 | 500 | 500 |
| வெங்காயப்பூ | — | 800 | — | — |
| முள்ளங்கி | 100 | 200 | — | 200 |
| பொன்னாங்காணி | 80 | 100 | 120 | 60 |
| வல்லாரை | 40 | 40 | 40 | 50 |
| ஈரப்பலா | 150 | 200 | — | 160 |


## பெறுகை அறிவித்தல்
## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை
## பாடசாலை மாணவர்களுக்கான போசாக்கு வழங்கும் வேலைத்திட்டத்திற்கான பொருட்கள் கொள்வனவு

1. தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை தகுதி வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பொருட்களை கொள்வனவு செய்வதற்கான விலைக் கேள்விகளைக் கோருகின்றார்.
2. தேசிய போட்டி விலைக் கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
3. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக்கொள்ளப்படாதவராகவும் பின்வரும் தேவைப்பாடுகளையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.
4. அக்கறை கொண்டுள்ள தகைமையுடைய விலைக் கேள்வியாளர்கள் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை (தொலைபேசி 021-205-0037 , தொலைநகல் 021-205-0036 இல் இருந்து மேலதிக தகவல்களை அலுவலக நாட்களில் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் அம்முகவரியில் **20.11.2023** ஆம் திகதியிலிருந்து **04.12.2023** ஆம் திகதி வரை மு.ப 9.00 மணியிலிருந்து பிற்பகல் 15.00 மணிவரை அலுவலக நாட்களில் விலைக் கேள்வி ஆவணங்களைப் பரிசீலனை செய்யலாம்.
5. அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர் ஆங்கில மொழியிலான விலைக் கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி ஒன்றை தலைவர், பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை என்னும் முகவரியில் **20.11.2023** ஆம் திகதியிலிருந்து **04.12.2023** ஆம் திகதி வரை காலை 9.00 மணியிலிருந்து பிற்பகல் 15.00 மணி வரையும், மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு கேள்வி ஆவணத்திற்கும் ரூபா 2000.00 (வரி நீங்கலாக) பணமாகச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.
6. விலைக்கேள்விகள் இரு பிரதிகளில் தயாரித்து தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை எனும் முகவரிக்கு **05.12.2023** ஆம் திகதி பிற்பகல் 14.00 மணிக்கு முன்பதாகக் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே **(05.12.2023 பி.ப 14.00)** வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்.
7. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை நிராகரிக்கவோ அல்லது மீள்கேள்வி கோரவோ பெறுகைக்குழுத் தலைவருக்கு அதிகாரம் உண்டு.
8. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப் பொறுப்பு மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட வங்கியிடம் இருந்து பெற்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| கேள்வி அடையாள இலக்கம் | பொருள் விபரம் | தேவையான அளவு | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|
| | | | பிணைவைப்பு (ரூபா) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/45(3)/PL/SP.ALL/01/2023 | உழுத்தம் பருப்பு | 201 kg - (1/2 kg படி 402 பொதிகள்) | 10,000.00 | 20.02.2024 |
| | நெத்தலி | 201 kg - (1/2 kg படி 402 பொதிகள்) | | |
| | பேரீச்சம்பழம் | 140.7 kg - (350 g படி 402 பொதிகள்) | | |
| | கடலை | 201 kg - (1/2 kg படி 402 பொதிகள்) | | |
| | கௌப்பி | 201 kg - (1/2 kg படி 402 பொதிகள்) | | |


**தயானந்தன் தர்சினி,**
**தலைவர்,**
**உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு,**
**பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை.**

(C-7670)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவுஸ்திரேலிய கப்பல் மீது தாக்குதல் நடத்திய சீனா

(கன்பரா)



அவுஸ்திரேலிய கடற்படை வீரர்கள் மீது சீனா ஒலியலைத் தாக்குதல் நடத்தியதாக அவுஸ்திரேலிய பாதுகாப்புத்துறை அமைச்சகம் குற்றம் சாட்டியுள்ளது.

இது குறித்து அந்த நாட்டு பாதுகாப்புத்துறை அமைச்சகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டு கண்டனம் தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில், "சர்வதேசக் கடல் எல்லையில் அமைந்துள்ள ஜப்பானின் சிறப்புப் பொருளாதார மண்டலம் வழியாகச் சென்று கொண்டிருந்த HMAS டூவூம்பா கடற்படைக் கப்பலின் 'புரொப்பல்லர்'களில் மீன் வலை சிக்கிக் கொண்டது.

அதனை நீக்குவதற்காக கடற்படை வீரர்கள் கடலுக்குள் குதித்தனர். அப்போது சீன கடற்படைக் கப்பலில் இருந்த ஒலியலைக் கருவி இயக்கப்பட்டது. இதில் அவுஸ்திரேலிய கடற்படை வீரர்கள் பலத்த காயமடைந்தனர்.

சீனாவின் இந்த நடவடிக்கை மிகவும் கவலையளிப்பதாக" குறிப்பிடப்பட்டுள்ளது.

தங்களது கடற்படை மற்றும் விமானப் படையினரைக் குறிவைத்து சீன இராணுவம் ஒலியலைத் தாக்குதல் நடத்துவதாக அமெரிக்காவும் பிறநாடுகளும் நீண்டகாலமாகவே குற்றஞ்சாட்டி வருகின்றன.

இதுபோன்ற நடவடிக்கைகளால் விபத்துகள் ஏற்படும் அபாயம் உள்ளதாகவும் இது சர்வதேச அளவிலான பதற்றத்தை ஏற்படுத்தும் என்றும் ஆய்வாளர்கள் எச்சரித்து வருகின்றனர். (நி-5)

# பணயக் கைதிகளை விடுவிக்கக் கோரி டெல் அவிவ் நகரில் போராட்டம்



(டெல்அவிவ்)

இஸ்ரேலிய அரசாங்கம் பணயக் கைதிகளை மீட்க இன்னும் அதிகமான முயற்சிகள் எடுக்கவேண்டும் என்று வலியுறுத்தி டெல் அவிவ் நகரில் நூற்றுக் கணக்கானோர் போராட்டம் நடத்தியுள்ளனர்.

இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு பணயக் கைதிகள் விடுவிக்கப்படுவதை உறுதிசெய்வதைக் காட்டிலும் ஹமாஸ் அமைப்பை ஒடுக்குவதில் அதிக முனைப்பு காட்டுவதாகச் சில விமர்சனங்கள் எழுந்துள்ளன.

அவரது நிலைப்பாடு காரணமாகப் பணயக் கைதிகளை விடுவிப்பதற்கான பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்படும் என்ற நம்பிக்கை இல்லை என்று சிலர் தெரிவித்துள்ளனர்.

இதற்கு முன் காசாவில் பணயக்கைதிகளாக இருப்பவர்களின் குடும்பத்தார், நண்பர்கள், ஆதரவாளர்கள் ஜெருசலத்தில் இருக்கும் நெதன்யாகு வீட்டின் முன் தங்களது 5 நாள் பேரணியை நிறைவு செய்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# இஸ்ரேல் - ஹமாஸ் போரால் 13,000 ஐ தாண்டிய உயிரிழப்பு

(காசா)

பாலஸ்தீன ஆதரவு பெற்ற காசாவிற்கும் இஸ்ரேலுக்கும் இடையே தொடர்ந்து போர் நடைபெற்று வருகிறது.

காசாவில் வான்வழி, கடல் வழித் தாக்குதல்களைத் தொடர்ந்து தற்போது தரை வழித் தாக்குதலை இஸ்ரேல் இராணுவம் நடத்தி வருகிறது.

இந்நிலையில் காசாவில் போரினால் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 13,000 ஐ கடந்துள்ளது.

ஒக்டோபர் 7 ஆம் திகதி முதல் இதுவரையில் இந்த உயிரிழப்புகள் பதிவாகியுள்ளதாக காசாவின் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இவற்றில் 5,000 குழந்தைகள் உள்ளடங்குவதாக கணக்கிடப்பட்டுள்ளது. மேலும் காசாவில் 1,800 குழந்தைகள் உட்பட 3,570 இற்கும் மேற்பட்டோர் காணாமல் போயுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (நி-5)


# வடகாசா...

## அகதிமுகாம்க...

## 80 பே...

(காசா)

**பாலஸ்தீன அகதிகள் தஞ்சம் அ... அல்பகுரா பாடசாலை மற்றும் தா... பாடசாலை மீது இஸ்ரேல் பே... தாக்குதலில் 80 இற்கும் மேற்... கொல்லப்பட்டுள்ளனர்.**



காசாவில் 11 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். வான்வழி தாக்குதலில் ஆயிரக்கணக்கான கட்டிடங்கள் இடிந்து தரைமட்டமாகி உள்ளன. மேலும் வடக்கு காசாவுக்குள் இஸ்ரேல் இராணுவம் தரை வழியாக புகுந்து தாக்கு...

# அல்ஷிஃபா மருத்து... வெளியிட்ட உலக சுகா...

(வோஷிங்டன்)

உலக சுகாதார ஸ்தாபனம் காசா நகரில் உள்ள அல்-ஷிஃபா மருத்துவமனை வளாகத்திற்குச் சென்று நிலைமைகளை அவதானித்த பின்னர் அந்த வைத்தியசாலை ஒரு "மரண வலயம்" என்று விவரித்துள்ளது.

உலக சுகாதார ஸ்தாபனம் தலைமையிலான ஐக்கிய நாடுகள் சபையின் கூட்டுக் குழு, இஸ்ரேலிய இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட மற்றும் வைத்தியசாலையிலிருந்து நோயாளிகள் உட்பட அனைவரும் வெளியேற்றப்பட்டதைத் தொடர்ந்து மருத்துவமனையை ஒரு மணி நேரம் மதிப்பீடு செய்தது.



ஷெல் தாக்குதல் மற்றும் துப்பாக்கிச் சூடு நடந்ததற்கான ஆதா...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...சாவில் உள்ள ...கள் மீது தாக்குதல்

## ...பேர் உயிரிழப்பு

### ...ம் அடைந்திருந்த ... தால்அல் ஜதார் ... மேற்கொண்ட ... மேற்பட்டவர்கள்



...தல் நடத்தி வருகிறது.

ஹமாஸ் அமைப்பினர் பதுங்கியுள்ளதாக கூறி அகதிகள் முகாம், பாடசாலை மீதும் இஸ்ரேல் இராணுவம் வான்வழி தாக்குதல் நடத்துகிறது.

இந்த நிலையில் இரண்டு பாடசாலைகள் மீது குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தப்பட்டு உள்ளது. ஜபாலியா அகதிகள் முகாமில் ஐ.நா சபை நடத்தும் அல்-பகுரா பாடசாலையில் ஏராளமானோர்தஞ்சம்அடைந்துஇருந்தனர்.


இந்த பாடசாலை மீது இஸ்ரேல் விமானங்கள் குண்டு வீசியதில் அந்த கட்டடம் இடிந்து விழுந்து. அதில் 50 பேர் பலியான தோடு ஏராளமானோர் காயம் அடைந்தனர்.

அதே போல் வடக்கு காசாவின் தால்-அல்-ஜாதார் பகுதியில் உள்ள பாடசாலை மீது தாக்குதல் நடத்தியதில் 30 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

இதற்கிடையே பாடசாலைகள் மீதான தாக்குதலில் இடிபாடுகளில் பலர் சிக்கியுள்ளதால் பலி எண்ணிக்கை அதிகரிக்கும் என்று அஞ்சப்படுவதாக தகவல் வெளியாகி உள்ளது. ஏற்கனவே சில நாட்களுக்கு முன்பு காசாவின் மிகப் பெரிய அகதிகள் முகாமான ஜபா லியா முகாம் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 200 பேர் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஐ.நா நடத்தும் பாடசாலையின் மீது தாக்குதல் நடத்தப்பட்டது போர்க்குற்றம் என்றும் ஐ.நா சபையை திட்டமிட்டு அவமதிக்கும் செயல் என்றும் எகிப்து கண்டனம் தெரிவித்துள்ளது. (நி-5)

# பிலிப்பைன்ஸில் நிலநடுக்கம் 6 பேர் உயிரிழப்பு



(மணிலா)

பிலிப்பைன்ஸில் ஏற்பட்ட நிலநடுக்கத்தினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 6 ஆக அதிகரித்துள்ளது.

குறித்த நிலநடுக்கம் கடந்த வெள்ளிக்கிழமை தெற்கு பிலிப்பைன்ஸில் 6.7 ரிக்டர் அளவில் பதிவாகியுள்ளது.

நிலநடுக்கத்தில் ஜெனரல் சாண்டோஸ் நகரத்தில் ஒரு பல்பொருள் அங்காடியின் கூரை இடிந்து வீழ்ந்ததில் பெண் ஒருவர் உயிரிழந்ததோடு மேலும் 19 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இடிபாடுகளில் சிக்கிய சுமார் 30 மாணவர்களும் மூச்சு விடுவதில் சிரமம் ஏற்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கோடாபாடோ அகழியில் பூமியின் மேலோடு நகர்வதால் நிலநடுக்கம் ஏற்பட்டிருக்கலாம் என மாநில நிலநடுக்க மையம் தெரிவித்துள்ளது. (நி-5)

# ஈரான் ஆதரவு தீவிரவாத குழுக்களுக்கு தடை விதித்துள்ள அமெரிக்கா

(வோஷிங்டன்)

ஈரான் ஆதரவு பயங்கரவாதக் குழுக்களுக்கு அமெரிக்கா புதிய பொருளாதாரக் கட்டுப்பாடுகளை விதித்து அவர்களை சர்வதேச பயங்கரவாதிகளாக அறிவித்துள்ளது.

இது தொடர்பாக அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஆண்டனி பிளிங்கன் விடுத்த அறிக்கையில் சிரியாவிலும் ஈராக்கிலும் ஐ.எஸ் தீவிரவாதிகளுடன் சண்டையிடும் அமெரிக்க மற்றும் அதன் கூட்டு நாடுகளின் வீரர்களுக்கு ஆபத்தையும் அச்சுறுத்தலையும் ஏற்படுத்தி வரும் கே.எஸ்.எஸ் என்ற ஈரான் ஆதரவு இயக்கம் தடை செய்யப்படுவதாக தெரிவித்துள்ளார்.

குறித்த இயக்கத்துடன் தொடர்புடைய ஆறு பேரை சர்வதேச தீவிரவாதிகளாகவும் அமெரிக்கா அறிவித்துள்ளது. (நி-5)

# ...துவமனை நிலையை ...சுகாதார ஸ்தாபனம்



...ரங்களைக் கண்டதாகவும், மருத்துவமனையின் நுழைவாயிலில் ஒரு புதைகுழியை அவதானித்ததாகவும் குழு கூறியது.

அதில் 80 பேரின் உடல்கள் இருப்பதாக கூறப்பட்டது. இஸ்ரேலிய இராணுவத்தால் வெளியிடப்பட்ட வெளியேற்ற உத்தரவுகளைத் தொடர்ந்து, 300 தீவிர சிகிச்சை அளிக்கப்படவேண்டிய நோயாளிகள் அல்-ஷிஃபாவில் உள்ளனர்.

மீதமுள்ள நோயாளிகள் மற்றும் ஊழியர்களை அவசரமாக காசாவில் உள்ள மற்ற வைத்தியசாலைகளுக்கு வெளியேற்ற ஏற்பாடு செய்ய முயற்சிப்பதாக உலக சுகாதார ஸ்தாபனம் கூறியது, மேலும் மீண்டும் மீண்டும் போர் நிறுத்தத் திற்கும் அழைப்பு விடுத்தது. (நி-5)

# பாலஸ்தீனத்தில் ஏற்படப்போகும் பாரிய பொருளாதார நெருக்கடி

## ஐ.நா சுட்டிக்காட்டு



(நியூயோர்க்)

இஸ்ரேலின் தொடர் தாக்குதல்களினால் எதிர்வரும் வார காலப்பகுதியில் பாலஸ்தீனத்தில் பாரிய பொருளாதார நெருக்கடி ஏற்படுவதற்கான சாத்தியம் காணப்படுவதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தி திட்டத்தின் நிர்வாகி அச்சிம் ஸ்டெய்னர் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் பாலஸ்தீனத்தில் 34 சதவீதத்திற்கும் அதிகமான மக்கள் பாரிய பொருளாதார நெருக்கடியை சந்திக்க நேரிடும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, தாக்குதலினால் இதுவரையில் காசாவில் 41,000 வீடுகள் கடுமையாக சேதமடைந்துள்ளதாககவும் 1,500,000 இற்கும் அதிகமான பாலஸ்தீனர்கள் இடம்பெயர்ந்துள்ளதாகவும் 18 வைத்திய சாலைகள் மூடப்பட்டுள்ளதாகவும் ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

# சிற்றரத்தை





டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

Botanical Name -Alpinia officinaram family- Zingiberaceae

பல பருவம் வாழும் செடி இனமாகும். இதன் தண்டு தரைக்குக் கீழாக நிலக்கீழ்த் தண்டாகக் காணப்படும். நறுமணம் உடையது எல்லா வகை மண்களிலும் வளரக் கூடியது.

மருத்துவப் பண்புகள் நிறைந்த நறுமணமுள்ள மட்ட நிலத் தண்டிற்காக பல பகுதிகளில் பயிரிடப் படுகிறது. இதனை நட்டு ஆறு மாதங்களின் பின்பு மட்ட நிலத் தண்டுகளை அறுவடை செய்யலாம்.


தோல் நீக்கிய சிறிய துண்டு ஒன்றை வாயில் இட்டுமெதுவாக சுவைத்தோமானால் ஒரு வித காரத்துடன் விறுவிறுப்புத் தோன்றும் உமிழ் நீர் மதுவாகத் தொண்டைக்குள் இறங்கிக் கொண்டு இருந்தோம். ஆனால் வறட்சியுடன் கூடிய இருமல் தணியும்.


100 கிராம் உலர்ந்த சிற்றரத்தையைப் பொடியாக்கிக் கொள்ள வேண்டும். பொடியாக்கும் முன்பு உலர்ந்த சிற்றரத்தையின் தோலைச் சுரண்ட வேண்டும் 100 கிராம் கற்கண்டை தனியாகப் பொடி செய்து சிற்றரத்தைப் பொடி ஒருகிராமை வாயில் இட்டு கற்கண்டுப் பொடியும் சமதளவு சேர்த்து உமிழ்ந்து சாப்பிட சளியுடன் கூடிய காய்ச்சல் தணியும். தினமும் இரண்டு வேளை அதாவது காலை மாலை பயன்படுத்தலாம்.

எமது முன்னோர்கள் புழுங்கல் நெல் அவியும் போது சில சிற்றரத்தைத் துண்டுகளை துணியில் முடிந்து நெல்லுடன் வேக வைத்து விடுவர். சிற்றரத்தையில் அரைவேக்காடு ஏறியதும் முடிச்சை வெளியே எடுத்து காய வைத்த பின் உரைக்கல்லில் உரைத்து வெந்நீரில் அல்லது தேனில் கலந்து கொடுக்க சிறுவர்கட்கு புகட்ட சளி, ஆஸ்மா ஆகியவை குறையும்.

குடலில் புளிப்பு சேராமல் செரிப்பதை ஒழுங்குபடுத்திக் குடலைத் தூண்டி அதன் கழிவுகளை அப்புறப்படுத்தும் குணம் உண்டு. சளி, சுவாச நோய்களை குழந்தை கட்டு அண்ட விடாமலும் செய்யும்.

எண்ணெயக் குளியல் நாளிலும் குளிப்பாட்டும் போது குழந்தைகட்கு சிற்றரத்தையை உரைத்துப் புகட்ட குழந்தைகட்கு சளி வராமல் தடுக்கும்.





உலர்ந்த சிற்றரத்தையை தோல் நீக்கி இடித்து சல்லடையை சலித்து வைத்துக் கொண்டு அரை தொடக்கம் ஒரு கிராம் அளவு பனங்கற்கண்டு சேர்த்து இளம் கன்று பசுவின் பாலில் கலந்து காலை மாலை கொடுக்க தொண்டைப்புண், சளி இருமல் தீரும்.

மேற்படி சூரணம் / பொடியை ஒரு கிராம் அளவு எடுத்து 50 மில்லி வெந்நீரில் ஒரு கொதி வந்ததும் இறக்கி வடிகட்டி தேனுடன் கலந்து கொடுக்க ஜீரணத்தைத் தூண்டும் வயிற்றுப் புளிப்பை அகற்றும். சளி, இருமல் இவைகளை அகற்றும் தன்மையும் உண்டு.

தோல் நீக்கிய சிற்றரத்தை ஒரு துண்டு, தோல் நீக்கிய இஞ்சி ஒரு துண்டு, உரித்த வெள்ளைப் பூடு 7 பல், மிளகு 6, ஆடாதோடை இலை 4, துளசி இலை 6, வெற்றிலை 2 இலைகளை அம்மியில் வைத்து லேசாக அரைத்து அவ்விழுதில் சுமார் 50 மில்லிலீற்றர் காய்ச்சிய வெந்நீரை விட வேண்டும்.

கலக்கிய பின்பு துணி கொண்டு வடிகட்டவும். வடிகட்டிய சுரசத்துடன் தேன் அல்லது சர்க்கரை கலந்து கொடுக்க ஒவ்வாமையால் வரும் ஆஸ்மா தணியும். சிற்றரத்தை 100 கிராம் கற்கண்டு 100 கிராம் தனித்தனியாக இடித்து பொடிசெய்து 2 கிராம் அளவு வாயிலிட்டு சிறிது காய்ச்சிய பால் அருந்த நுரையீரல் சம்பந்தப்பட்ட நோய், சீதளக் காய்ச்சல் தீரும்.

சிற்றரத்தை, திப்பிலி, தாளிசபத்திரி ஆகிய வற்றை ஒவ்வொன்றும் 10 கிராம் அளவு எடுத்து, அம்மியைக் கழுவி அதிலிட்டு சிறிது நீர்விட்டு நைய அரைத்து, அரைத்த விழுதை 100 மில்லி நீரில் கலந்து பொங்கக் காய்ச்சி வடிகட்டி, நோயின் தன்மை, நோயாளியின் வயதிற்கு ஏற்ப தேன் கலந்து கொடுக்க மூக்கடைப்பு, பீனிசம், தலைவலி, வறட்டிருமல் தீரும்.

ஒரு சிறிய துண்டு பச்சையான சிற்றரத்தையை வாயில் போட்டு வந்தால் வாய்த்துர்நாற்றம் நீங்கும்.

உலர்ந்த சிற்றரத்தையை தோல்சீவி பொடித்து அரித்து 1கிராம் அளவு காலை, மாலை தேனில் குழைத்து சாப்பிட்டு வந்தால் நாட்பட்ட இருமல், ஜலதோஷம் நீங்கும்.

சூட்டு இருமலுக்கு 2,3 சிற்றரத்தை துண்டுகளை இடித்து 250 மில்லி வெந்நீரில் 3 மணி நேரம் ஊறவைத்து காலை, மாலை இரண்டாக பகிர்ந்து குடித்துவர சூட்டினால் வரும் இருமல் நீங்கும்.

மூட்டு வலிக்கு உலர்ந்த சிற்றரத்தை, அமுக்கிரா வேர் ஒரே அளவாக எடுத்து, நன்கு உலர்ந்ததும் தனித்தனியாக பொடித்து, பின்பு இரண்டையும் கலந்து பொடித்து, அரித்து 1-2 கிராம் அளவு காலை, மாலை வெந்நீரில் 48 நாட்கள் சாப்பிட்டு வர மூட்டு வலி படிப்படியாகக் குறையும் சாப்பாட்டிற்கு முன்பு எடுக்கவும். தூய தேன் கிடைக்குமானால் வெந்நீருக்கு பதிலாக பயன்படுத்தலாம். உலர்ந்த சிற்றரத்தையை தூள் செய்து, அரித்து, 1 கிராம் அளவு எடுத்து சிறிது எலுமிச்சம் சாறும், தேனும் அளவாகக் கலந்து காலை, மாலை சாப்பாட்டின் பின்பு 7 நாட்கள் எடுத்து வர பீனிச நோய் குணமாகும்.

### மழைக் காலங்களில் ஏற்படும் சளி உபாதைக்கு

சுக்கு -100 கிராம் உலாந்த சிற்றரத்தை- 100 கிராம் எடுத்து பொடித்து, அரித்து சம அளவு பனை வெல்லம் பொடித்து சேர்த்து 1 கிராம் அளவு காலை, மாலை தேன் கலந்து அருந்த மேற்படி நிலைமை குணமாகும். தொடர்ந்து 7 நாட்கள் சாப்பிடலாம்.

பொதுவாக ரசம், சட்னி தயாரிக்கும் போது சிறிதளவு சிற்றரத்தை சேர்க்கும் போது செரிமானத்தை தூண்டக் கூடியதாக இருக்கும்.

### சிற்றரத்தை தேநீர்

சிற்றரத்தை, அதி மதுரம், சுக்கு, கராம்பு, ஏலக்காய். 250 மில்லி தண்ணீரை எடுத்து சூடுபடுத்தி சிட்டிகை அளவு மேற்படி பொடிகளை சேர்த்து 1 கராம்பு 2 ஏலக்காய் சேர்த்து மெல்லியதாக எரித்து 100 மில்லி அளவு சுண்டக்காய்ச்சி தேநீர் போல அருந்திவர உடலுக்கு புத்துணர்ச்சியைத் தரக் கூடியதாக இருக்கும். எல்லோர்வீட்டுத் தோட்டங்களிலும், சமையலறையிலும் மேற்படி சிற்றரத்தை கட்டாயமாக இருக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘ரேஸ்’ ஓடிய பேருந்துகள் உயிர்தப்பிய பயணிகள்



(மன்னார்)

யாழ்ப்பாணம்-மன்னார் பாதையூடாக பயணித்த தனியார் பேருந்துகள் போட்டி போட்டு ஒன்றை ஒன்று முந்த முயற்சித்த நிலையில் நிலைதடுமாறி அருகில் இருந்த மரத்தில் மோதவிருந்த நிலையில் அருகில் இருந்த மணல்திட்டினால் பயணிகள் தெய்வாதீனமாக உயிர் தப்பினர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து நேற்று மதியம் 3 மணியளவில் புறப்பட்ட தனியார் பேருந்து பயணிகளை ஏற்றிக் கொண்டு முழங்காவில். முக்கொம்பன் பகுதியில் பயணித்துக் கொண்டிருந்த நிலையில் பின்னால் வந்த மற்றைய தனியார் பேருந்து சாரதியின் செயற்பாட்டால் நிலைதடுமாறியுள்ளது.

பின்னால் வந்த சாரதி வேகமாக வாகனத்தை செலுத்தியதுடன் ஆபுத்தை ஏற்படுத்தும் விதமாகவும் வாகனத்தைச் செலுத்தியுள்ளார். இதன் காரணமாக நிலைதடுமாறிய வாகனம் அருகில் உள்ள மரத்தில் மோதும் விதமாக சென்ற நிலையில் மரத்தை சூழ இருந்த மணல்திட்டு காரணமாக விபத்து தவிர்க்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட பயணிகள் பேருந்தில் இருந்து இறக்கப்பட்டு வேறு பேருந்தில் அனுப்பி வைக்கப்பட்டதுடன் பேருந்தை பொலிஸார் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் நிலையம் கொண்டு சென்றுள்ளனர். தொடர்ச்சியாக மன்னார்-யாழ்ப்பாணம்,மன்னார்-வவுனியா வீதிகளில் பேருந்து சாரதிகள் மக்களின் உயிர்களை மதிக்காது பேருந்துகளை போட்டி போட்டு செலுத்தும் சம்பவங்களும் அதனால் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படும் சம்பவங்களும் பதிவாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5-285)

மாவீரர் வாரம் ஆரம்பிக்கவுள்ள நிலையில் நேற்று கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு முன்பாக சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. (படம்:-கஜிந்தன்)





நன்னீர் மீன் உற்பத்தியினை மேம்படுத்துவதன் ஊடாக உணவுப் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் தேசிய வேலைத் திட்டத்தின் கீழ் நன்னீர் மீன்வளர்ப்புத் திட்டம் அரசினால் ஆரம்பிக்கும் நிகழ்வு நேற்று கிளிநொச்சியில் ஆரம்பமானது.

(படம்:-சப்தசங்கரி, தேவானந்தன்)

# ஹெரோயின் போதைப்பொருட்கள் மீட்பு சந்தேகநபர்கள் தப்பியோட்டம்

## பொலிஸார் வலைவீச்சு

(முல்லைத்தீவு)

முள்ளியவளை கணுக்கேணி பகுதியில் போதைப் பொருட்கள் மீட்கப்பட்டுள்ளதோடு சந்தேகநபர்கள் தப்பிச் சென்றுள்ள சம்பவம் ஒன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு முள்ளியவளை கணுக்கேணியில் போதைப்பொருள் தொடர்பாக நேற்று முன்தினம் இரவு இராணுவ புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்து சம்பவ இடத்திற்குச் சென்ற போது சந்தேகநபர்கள் போதைப்பொருட்களை போட்டுவிட்டு தப்பி ஓடி உள்ளார்கள்.

குறித்த இடத்திலிருந்து சிறுசிறு பொதி செய்யப்பட்ட ஹெரோயினுடன் குடு போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்டுள்ள போதைப் பொருட்கள் முள்ளியவளை பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் சந்தேகநபர்களை பொலிஸார் தேடி வருவதாகவும் விசாரணைகளின் பின்னர் முல்லைத்தீவு நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (நி-5-299)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2970

### டிலானி

இந்த ஆஸ்பத்திரியிலதான் என் கணவரைப் பறிகொடுத்தேன்...
ஐயோ பாவம்... ஆபரேஷன்ல இறந்துட்பாரா?



இல்லை... நர்ஸைக் கூட்டிற்று ஓடிப்போய்ட்டார்...

### சதீஸ்




### வைஷ்ணவி




### கார்த்தி

துணி துவைக்கிறது எவ்வளவு பெரிய கஷ்டம் தெரியுமா...?




### கனுசிகா

எறும்பு ஊர கல்லும் தேயும் - பழமொழி



போன் நோண்ட கண்ணும் டிரை ஆகும் - புதுமொழி...

### ஆதித்தன்

கணவனின் FACEBOOK STATUS:-
பறவையைப்போல் வானில் பறக்கவேண்டும்
மனைவியின் COMMENT:-
பூமிக்கு வரும்போது ஒரு கிலோ வெங்காயமும் நாலு முட்டையும் வாங்கிட்டு வாங்க

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 333





குந்தவை தன் முத்துப் போன்ற பற்களினால் பவழச் செவ்விதழ்களைக் கடித்துக் கொண்டாள்.

"எப்போதோ கேட்ட மாதிரி இருக்கிறது பிற்பாடு என்ன நடந்தது?"

"பிற்பாடு என்ன? கந்தன் மாறனை முதுகில் குத்திப் போட்டு அவனுடைய சிநேகிதன் ஓடிவிட்டான். அந்த ஒற்றனைப் பிடித்து வருவதற்கு என் மைத்துனர் ஆள்கள் அனுப்பியிருப்பதாகக் கேள்வி!"

"அவன் ஒற்றன் என்பது எப்படி நிச்சயமாய்த் தெரியும்?"

"அவன் ஒற்றனோ இல்லையோ, எனக்கு என்ன தெரியும்? சம்புவரையர் மகன் சொல்லுவதைத்தான் சொல்கிறேன். தாங்கள் வேண்டுமானால் நேரில் அவனிடமே கேட்டு எல்லா விவரமும் தெரிந்து கொள்ளலாம்."

"ஆமாம் சம்புவரையர் மகனை நானும் பார்க்க வேண்டியதுதான். அவன் பிழைத்ததே புனர்ஜன்மம் என்று கேள்விப்பட்டேன். அப்போது முதல் பழுவூர் அரண்மனையிலே தான் அவன் இருக்கிறானா?"

"ஆம் காயம்பட்ட மறுநாள் காலையில் நம் அரண்மனையில் கொண்டு வந்து போட்டார்கள். காயத்துக்கு வைத்திய சிகிச்சை செய்ய வேண்டிய பொறுப்பும் என் தலையில் விழுந்தது. மெதுவாக உயிர் பிழைத்துக் கொண்டான் காயம் இன்னும் முழுவதும் ஆறியபாடில்லை!"

"நீங்கள் பக்கத்திலிருந்து பராமரித்து இன்னும் முழுதும் குணமாகவில்லை என்பது ஆச்சரியமான விடயந்தான். ஆகட்டும், ராணி! நான் அவசியம் வந்து அவனைப் பார்க்கிறேன். சம்புவரையர் குலம் நேற்று முதல் நாள் ஏற்பட்டதா? பராந்தக் சக்கரவர்த்தியின் காலத்திலிருந்து வீரப்புகழ் பெற்ற குலம் அல்லவா?"

"அதனாலேயே நானும் சொன்னேன். கந்தன் மாறனைப் பார்க்கும் வியாஜத்திலாவது எங்கள் ஏழை அரண்மனைக்கு எழுந்தருளுவீர்கள் அல்லவா?" என்றாள் நந்தினி.

இதற்குள் தேவாரப் பாடல் முடிந்தது தானசாஸன வாசிப்பு ஆரம்பமாகிவிட்டது. முதலில் சுந்தர சோழ சக்கரவர்த்தியின் திருமுகம் படிக்கப்பட்டது. "நமது திருமகளார் குந்தவைப் பிராட்டிக்கு நாம் சர்வமானியமாகக் கொடுத்திருந்த நல்லூர் மங்கலம் கிராமத்தின் வருமானம் முழுவதையும் இளைய பிராட்டியார் தஞ்சை புறம்பாடி ஆதுரசாலைக்கு அளிக்க உவந்திருப்பதால், அந்த ஊர் நன்செய் நிலங்கள் யாவற்றையும் 'இறையிலி' நிலமாகச் செய்திருக்கிறோம்" என்று அந்த ஓலையில் சக்கரவர்த்தி தெரியப்படுத்தியிருந்தார். திருமந்திர ஒலை நாயகர் அதைப் படித்தபின் தனாதிகாரி பெரிய பழுவேட்டரையரிடம் கொடுக்க, பழுவேட்டரையர் அதை இருகரங்களாலும் பெற்றுக் கண்களில் ஒற்றிக் கொண்டு கணக்காயரிடம் கொடுத்துக் கணக்கில் பதிய வைத்துக் கொள்ளும்படி சொன்னார்.

பிறகு குந்தவைப் பிராட்டியின் தான சிலா சாஸனம் படிக்கப்பட்டது. மேற்கூறிய கிராமத்து சர்வமானிய நிலங்களை அந்த ஊர் விவசாயிகளே சகல உரிமைகளுடன் அனுபவித்துக் கொண்டு தஞ்சாவூர் சுந்தர சோழ ஆதுரசாலை வைத்தியருக்கு ஆண்டு ஒன்றுக்கு இருநூறு கலம் நெல்லும் ஆதுர சாலையில் சிகிச்சை பெறும் நோயாளிக்காகத் தினந்தோறும் ஐம்பது படி பசும் பாலும், ஐந்து படி ஆட்டுப் பாலும், நூறு இளநீரும் அனுப்பவேண்டியது என்று கருங்கல்லில் செதுக்கப்பட்டிருந்ததுடன், எழுதியவன் பெயரும் எழுதியதை மேற்பார்வை செய்த அதிகாரிகளின் பெயர்களும் அதில் விவரமாகப் பொறிக்கப்பட்டிருந்தன.


அந்தச் சிலாசாஸனத்தைப் படித்தபிறகு, அங்கு இந்த வைபவத்துக்காக வந்திருந்த நல்லூர் மங்கல கிராமத் தலைவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. கிராமத் தலைவர்கள் சாஸனக் கல்லைப் பயபக்தியுடன் வாங்கிக் கொண்டு அருகில் நின்ற யானை மீது ஏற்றினார்கள்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## பச்சோந்திக் கல்



நகரில் கப்பிரோடு ஒன்று இருந்தது. அதன் மேல் வேகமாகப் போன வண்டியின் சக்கரம் ஒன்று ஒரு கப்பிக் கல்லை பெயர்த்து உருட்டி விட்டுப் போய் விட்டது. அந்தக் கப்பிக் கல் தனக்குள் சொல்லிக் கொண்டது.

"என்னைப் போன்ற மற்றவர்களுடன் பிணைக்கப்பட்டு நான் இப்படி ஒரே இடத்தில் கிடப்பானேன்? நான் தனியாகவே வாழ்ந்து பார்க்கிறேன்!"

தெருவோடு போன ஒரு பையன் அந்தக் கல்லைத் தன் கையில் எடுத்துக் கொண்டான். கல் தனக்குள் எண்ணிக் கொண்டது.

"நான் பிரயாணம் செய்ய விரும்பினேன். பிரயாணம் செய்கிறேன். தீவிரமாக எதையும் விரும்பினாலே போதும். விருப்பிய படி நடக்கும்!"

கல்லை ஒரு வீட்டை நோக்கி எறிந்தான் பையன். "ஹா! நான் பறக்க விரும்பினேன் பறக்கிறேன். என் விருப்பம் போலத்தான் நடக்கிறது எல்லாம்"

ஒரு ஜன்னல் கண்ணாடியில் 'டண்' என்று கல் மோதி உடைத்துக் கொண்டு உள்ளே போனது, கண்ணாடி உடையும் போது அது சொல்லியது "போக்கிரி, நான் போகும் வழியில் விலகிக் கொள்ளாமல் நிற்கிறாயே?! என்னை மறிப்பவர்களை எனக்குப் பிடிக்கவே பிடிக்காது. என் சௌகரியத்திற்காகத் தான் எல்லாம் இருக்கிறது. ஆகவே இனிமேல் கவனமாக இரு!"

வீட்டின் அறைக்குள் இருந்த ஒரு மெத்தையின் மேல் விழுந்தது கல். "இவ்வளவு நேரம் பிரயாணம் செய்ததில் அலுப்பாகி விட்டது. சற்று ஓய்வு தேவை என்று நினைத்த பட்சத்திலேயே படுக்கை கிடைத்து விட்டதே. ஆஹா!" என்று நினைத்துக் கொண்டது.

ஒரு வேலைக்காரன் அங்கே வந்தான். படுக்கையில் இருந்த கல்லைத் தூக்கி ஜன்னல் வழியே திரும்பவும் தெருவில் எறிந்து விட்டான்.

அப்போது கப்பிக் கல் தன்னுடன் பதிந்திருந்த ஏனைய கப்பிக் கற்களிடம் "சகோதரர்களே! சௌக்கியமா? நான் இப்போது பெரிய மனிதர்களைப் பார்க்க அவர் மாளிகைக்குப் போய் விட்டுத் திரும்புகிறேன். பெரிய மனிதர்களையும் பணக்காரர்களையும் எனக்குப் பிடிப்பதில்லை. என்னைப் போன்ற சாதாரண மக்களிடம்தான் எனக்கு உண்மையில் ரொம்பப் பிரியமும் மரியாதையும் இருக்கிறது. அதனால்தான் திரும்பி விட்டேன்" என்றது.

சொல்லிக் கொண்டிருக்கும் போதே சரக்கு ஏற்றி வந்த ஒரு வண்டியின் சக்கரம் தனியாகக் கிடந்த கல்லின் மேல் ஏறியது. "அரசியலில் இதெல்லாம் சகஜமப்பா!" என்று சொல்லிக் கொண்டே துண்டு துண்டாகச் சிதறிப் போனது அந்தப் பச்சோந்தி கப்பிக்கல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமக்கு எறும்புகளைப் போல் உபதேசிப்பவர் யாருமில்லை ஆனால் அந்த எறும்புகளோ பேசுவதில்லை. – ஃபிராங்லின்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## எமது கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைவதனால்...

எல்லை தாண்டும் தமிழக மீனவர்களால் நம் கடற்றொழிலாளர்கள் மிகுந்த கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர்.

தமிழக மீனவர்கள் எமது கடல்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதால், எங்கள் மீனவர்கள் கடுமையான தொழில்நட்டத்தை அனுபவிக்கின்றனர்.

குறிப்பாக றோலர் படகுகள் மூலம் எமது கடற்பரப்புக்குள் நுழைகின்ற தமிழக மீனவர்கள் எங்கள் கடலில் உள்ள அத்தனை வளங்களையும் சூறையாடிச் செல்கின்றனர்.

இதனால் கடற்றொழிலுக்குச் செல்கின்ற எங்கள் கடற்றொழிலாளர்கள் வெறுங்கையோடு வீடு திரும்புகின்ற அளவில் நிலைமையுள்ளது.

இதுதவிர எல்லை தாண்டுகின்ற தமிழக மீனவர்களும் எமது கடற்றொழிலாளர்களும் எமது கடற்பரப்பில் சந்திக்கின்றபோது அது முரண்பாடாக – இரு தரப்பு மோதலாக மாறுகின்ற சந்தர்ப்பங்களும் உண்டு.

நிலைமை இதுவாக இருக்கின்றபோதிலும் எமது கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடிக்கின்ற தமிழக மீனவர்களின் நடவடிக்கைகள் தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

இது தொடர்பில் எமது கடற்றொழிலாளர்கள் அகிம்சை வழியில் எத்தனையோ போராட்டங்களை நடத்தியும் எந்தப் பயனும் கிடைக்கவில்லை.

மாறாக அண்மையில் எமது கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்த 22 மீனவர்கள் கைது செய்யப்பட்டு ஊர்காவற்றுறை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதில் 21 மீனவர்கள் விடுதலை பெற்றனர். ஆனால் ஒருவர் இரண்டாவது தடவையாகவும் அத்துமீறி நுழைந்ததன் காரணமாக அவருக்கு 24 மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

தவிர, நேற்று முன்தினம் பருத்தித்துறை கடற்பரப்புக்குள் நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட தமிழக மீனவர்கள் 22 பேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

இருந்தும் இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் இது தொடர்பில் கொழும்பிலுள்ள உயர்மட்டத்துடன் கதைத்ததன் அடிப்படையில் அவர்கள் 22 பேரையும் இலங்கைக் கடற்படை விடுதலை செய்தது.

இவ்வாறு தமிழக மீனவர்கள் கைது செய்யப்படுவதும் அவர்களைப் பொலிஸார் வரிசை கட்டி நீதிமன்றங்களுக்கு அழைத்துச் செல்வதையும் பார்க்கும்போது மனம் வேதனைப் படுகிறது.

அவர்கள் எங்கள் சகோதரர்கள். இவ்வாறான சம்பவங்கள் எங்களையும் எங்கள் தமிழகத்தையும் அந்நியப்படுத்தி விடுமோ என்ற ஏக்கமும் உண்டு.

தவிர, எங்களையும் தமிழகத்தையும் பகைக்க வைப்பதுகூட இன்றைய அரசியல் இராஜதந்திரமாகக் கருதப்படுகிறது.

இந்நிலையில் எங்கள் தமிழக மீனவ சகோதரர்கள் எங்கள் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடிப்பதை முற்று முழுதாக தவிர்க்க வேண்டும்.

இதுபற்றி எங்கள் தமிழ் அரசியல் தலைவர்களும் தமிழக அரசியல் தரப்புகளும் கூடிக்கதைத்து ஒரு சுமூகமான நிலைமைக்கு வருவது கட்டாயமானது.

எனவே இதுபற்றி நம் தமிழ் அரசியல்வாதிகள் தமக்குள் கூடிக் கதைத்து விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## பாரவூர்தி-பேருந்து மோதி விபத்து மூவர் காயம்

(வவுனியா)

வவுனியா, ஓமந்தை பகுதியில் பாரவூர்த்தியுடன் இ.போ.சபை பேருந்து மோதி விபத்துக்குள்ளாகியதில் மூவர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக ஓமந்தைப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று காலை இடம்பெற்ற இவ் விபத்து குறித்து மேலும் தெரியவருவதாவது,

யாழில் இருந்து வவுனியா நோக்கி சென்ற பாரவூர்த்தி ஓமந்தைப் பகுதியில் பயணித்த போது வீதியில் படுத்திருந்த மாடுகளுடன் மோதுவதை தடுக்கும் வகையில், பாரவூர்தியை செலுத்திய போது அதே வழியில் வந்த இ.போ.சபை பேருந்து கட்டுப்பாட்டையிழந்து பாரவூர்தியுடன் மோதி விபத்துக்குள்ளானது.

இதனையடுத்து பாரவூர்தி வீதியை விட்டு விலகி தடம்புரண்டுள்ளது. இவ்விபத்தில் பாரவூர்த்தியில் பயணித்த சாரதி மற்றும் நடத்துநர் காயமடைந்ததுடன், பேருந்தில் பயணித்த பயணி ஒருவரும் காயமடைந்துள்ளார். காயமடைந்த மூவரும் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள னர். விபத்து தொடர்பில் ஓமந்தைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி-5-250)

## வெற்று ரவையுடன் வந்தவர் சங்குப்பிட்டியில் கைது

(சாவகச்சேரி)

எல்.என்.ரி வகை துப்பாக்கிக்கு பயன்படுத்தும் வெற்று தோட்டா ரவைகளுடன் வந்த ஒருவரை நேற்று ஞாயிற்றுக் கிழமை சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சங்குப்பிட்டி சோதனைச் சாவடியில் வைத்து பாதுகாப்புத் தரப்பினர் கைது செய்துள்ளனர்.

பூநகரிப் பகுதியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பட்டா ரக வாகனத்தில் மறைத்து, இரும்புத் தேவைக்காக எடுத்துச் செல்லப்பட்ட வெற்று ரவைகளே இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளன. அத்துடன் வாகனச் சாரதியும் இதன் போது கைது செய்யப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (நி-5-30)

## இலங்கையில் விரைவில் மிதக்கும் அணுமின் நிலையம்

(கொழும்பு)

இலங்கையில் அணுமின் நிலையத்தை நிர்மாணிக்கும் திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகிறது.

2032ஆம் ஆண்டளவில் இதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக இலங்கை அணுசக்தி சபையின் தலைவர் பேராசிரியர் எஸ்.ஆர்.டி.ரோசா தெரிவித்துள்ளார்.

இலங்கையில் அணுசக்தி சட்டம் தயாரிக்கப்படவுள்ளது. இதற்காக சர்வதேச அணுசக்தி நிறுவனத்தின் அணுசக்தி மற்றும் ஒப்பந்தச் சட்டப் பிரிவின் தலைவர் அந்தோனி வெதரோல் உட்பட நான்கு பிரதிநிதிகள் இலங்கை வந்துள்ளனர்.

கொழும்பு துறைமுக நகரம், இலகுரக ரயில் உள்ளிட்ட நாட்டின் புதிய திட்டங்களுக்கு அணுசக்தி மின்சார வழங்கல் மிகவும் பொருத்தமான தெரிவாகும்.

அதன்படி, 400 மெகாவோட் திறன் கொண்ட மிதக்கும் அணுமின் நிலையம் குறித்து இலங்கை கவனம் செலுத்தி வருவதாக இலங்கை அணுசக்தி சபையின் தலைவர் பேராசிரியர் எஸ்.ஆர்.டி.ரோசா தெரிவித்தார். (நி-5)

**வடமாகாண மரநடுகை மாதம்**
**கார்த்திகை - 2023**

**“நாகரிகத்தின் வேர் காடுகள்தான். கூட்டங்களில் இருந்து விலகியிருந்து மரங்களுடன், ஆறுகளுடன், ஏரிகளுடன் ஒன்றாய்க் கலந்திருந்த மனிதர்களிடம் இருந்து தான் தலைசிறந்த கருத்துகள் வந்துள்ளன. காடுகளின் அமைதி மனிதனின் அறிவாற்றல் பெருக உதவியுள்ளது.”**

[illegible]

## மற்றுமொரு சீன ஆய்வுக் கப்பலுக்கு அனுமதி

(கொழும்பு)

அடுத்த வருடத்தின் ஆரம்பத்தில் இலங்கைக் கடற்பரப்பிற்குள் பிரவேசிப்பதற்கு சீனாவின் மற்றுமொரு ஆய்வுக் கப்பலுக்கு அனுமதி கோரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனத் தூதரகத்தினால் வெளிவிவகார அமைச்சிடம் இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடல்சார் ஆய்வுகளில் ஈடுபடும் ஸியாங் யாங் ஹொங் 3 என்ற கப்பலுக்கு இந்த அனுமதி கோரப்பட்டுள்ளதாக குறித்த தகவல்கள் குறிப்பிடுகின்றன.

எனினும், இந்த கோரிக்கை இன்னும் பரிசீலிக்கப்படவில்லை என வெளிவிவகார அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி-5)

## போதிய சீனி கையிருப்பில்

(கொழும்பு)

நாட்டில் சீனித் தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பில்லை என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

19,000 மெற்றிக் தொன் சீனி கையிருப்பில் உள்ளதனால் தட்டுப்பாடு ஏற்படாது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-5)

## விளையாட்டுத்துறை அமைச்சு பதவியில் மாற்றம்?

(கொழும்பு)

விளையாட்டுத்துறை அமைச்சர் பதவியில் எதிர்வரும் ஜனவரி மாதம் மாற்றம் ஏற்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தற்போது இடம் பெற்றுவரும் வரவு - செலவுத் திட்ட விவாதம் முடிவடைந்ததையடுத்து, இந்த மாற்றம் ஏற்படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார மற்றும் நீர்ப்பாசன அமைச்சராக தற்போது பதவி வகிக்கும் ரொஷான் ரணசிங்க, விளையாட்டு அமைச்சு பொறுப்பிலிருந்து நீக்கப்பட்டு, அந்த இடத்துக்கு எஸ்.பி. திஸாநாயக்க நியமிக்கப்பட வேண்டும் என பல முன்மொழிவுகள் அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (நி-5)

## மசகு எண்ணெய் விலை அதிகரிப்பு

(வோஷிங்டன்)

சர்வதேச சந்தையில் மசகு எண்ணெயின் விலை நேற்றையதினம் அதிகரிப்பை பதிவு செய்துள்ளது.

உலக சந்தையில் WTI ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 80.61 அமெரிக்க டொலராக நிலவுகிறது.

அத்துடன் பிரெண்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 75.59 அமெரிக்க டொலராக அதிகரிப்பை பதிவு செய்துள்ளது. (நி-5)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை **செவ்வாய்க்கிழமை காலை 09.00 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை யாழ்.பிரதேசத்தில்** ஓமினி அலுமினியம் தொழிற்சாலை-கரந்தன், அரசகேசரி பிள்ளையார் கோவிலடி நீர்வேலி, கரந்தன், மாலை வைரபர் கோவிலடி, போயிட்டி, பொக்கணை, ஊரேழு அம்மன் கோவில் ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** அரசன் அரிசி ஆலை, மகாறம்பைக்குளம், பூ-ஓயா ஈரப் பெரியகுளம் இராணுவ முகாம்,குருந்துபிட்டிய, தேசிய இளைஞர் பயிற்சி முகாம், RDW கல்லுடைக்கும் ஆலை, அழகல்ல (தீருவேகம), அளுத்கம, ஈரற் பெரியகுளம் பொலிஸ் நிலையத்தடி-ஈரப்பெரியகுளம், கல்குண்டாமடு, பகல அளுத்வத்த, புபுதுகம, வேரகம ஆகிய பிரதேசத்திலும் மின்சாரம் தடைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார நெருக்கடியில் இருந்து தப்பிக்க சர்வதேச நாணய நிதியம் செய்த பரிந்துரைகள் பற்றிய ஒரு மேலோட்ட பார்வை

03



கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

இலங்கை அரசாங்கத்தின் கோரிக்கைக்கு பதிலளிக்கும் வகையில், சர்வதேச நாணயநிதியத்தின் (IMF) பணிக்குழு மார்ச் 9 முதல் மார்ச் 31.2023 வரை ஆளுகை கண்டறியும்மதிப்பீட்டை மேற்கொண்டது. இந்த பணிக்கு ஜோயல் தலைமைதாங்கினார். டர்ர்க்விட்ஸ் மற்றும் டேவிட்ராபின்சன், ஆலிஸ் பிரெஞ்ச், ஜேன்டுவாசிங், சிண்டி நெகஸ், ஓஸ்லெம்அய்டின், செபாஸ்டியன்பீர், கிரிஸ்காஃப்மேன், டேவிட்க்ளோடன், ஜாக்லூ பர்ட், யாராகில் கிரிஸ்ட்சண்டாக்லி மற்றும் மதிஜோனாக் ரோசல்ஸ்கா ஆகியோர் உறுப்பினர்கள் ஆவார்.

இந்த பணிக்கு அசங்கா அபேய குணசேகர் குறுகிய கால நிபுணராக உதவினார். இந்தபணிக்காக குழ் 80 கூட்டங்களை நடத்தியது. மேலும் ஜனாதிபதியின் தலைமை அதிகாரி, இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர், பிரதி ஆளுநர் மற்றும் அதிகாரிகள், நிதி அமைச்சின் அதிகாரிகள், நீதிஅமைச்சு, காணி அமைச்சு, கணக்காளர் நாயகம் அலுவலகம், சட்டமா அதிபர் திணைக்களம், இலஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகள் விசாரணை ஆணைக்குழு, இலங்கை இறைவரி வருவாய் திணைக்களம், சுங்கத் திணைக்களம், தகவல் அறியும் உரிமை ஆணைக்குழு, நிதி நுண்ணறிவு மையம், வங்கி சங்கம் மற்றும் அரசு மற்றும் தனியார் வங்கிகளின் பிரதிநிதிகள் ஆகியோரைச் சந்தித்தது.

மேலும் இந்த பணிக் குழு சிவில் சமூகத்தின் உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகம் மற்றும் ஊழலுக்கு எதிராக பணியாற்றும் சர்வதேச பங்காளிகளையும் சந்தித்து கலந்துரையாடியது. மார்ச் 2023 முக்கிய பணியின் போது பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் ஆழமாக மதிப்பீடு செய்து, 139 பக்கங்களைக் கொண்ட அறிக்கையை சமர்ப்பித்துள்ளது. இதனை ஒரு அறிக்கை என்று கூறுவதிலும் பார்க்க அதில் கூறப்பட்டுள்ளவை இலங்கைக்கு கடன் கொடுப்பதற்கான நிபந்தனைகளென்றே கூற வேண்டும்.

"சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவ சபையினால் இலங்கைக்கு 2.276 பில்லியன் அமெரிக்க டொலரை 48 மாதங்களில் வழங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பொருளாதார பிரச்சினைக்கு தீர்வாக இதனை பார்க்க முடியும். இந்த கடனுதவித் திட்டத்தின் ஊடாக உடனடியாக 330 மில்லியன் அமெரிக்க டொலரை பெற்றுக்கொள்ள முடியும்.

இந்த நிதியானது விலையை ஸ்திரப்படுத்தல், அந்நிய செலாவணி இருப்பதை அதிகரித்தல், பணவீக்கத்தினால் குறைந்த வருமானத்தை கொண்ட குடும்பங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை குறைத்துக் கொள்ளுதல், அத்தியாவசிய பொருட்களை இறக்குமதி செய்தல் உள்ளிட்ட இயலுமையை இதனூடாக ஏற்படுத்திக் கொள்ள முடியும்" என சர்வதேச நாணய நிதியம் கூறியுள்ளது. அவ்வாறு IMF கூறினாலும் இவ் அறிக்கையில் உள்ளவை நிறைவேற்றப்படும் போதே எமக்கு கடன் முற்றிலுமாகக் கிடைக்கும்.

இது பற்றி மூத்தவிரிவுரையாளர் எம்.கணேசமூர்த்தி பின்வருமாறு கூறியிருந்தார்.

"இவ் அறிக்கையில் உள்ள சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகள் மிகமிக வலிமையுடையவை. சாதாரண பொது மக்கள் மட்டும் இல்லை, மத்திய தரவகுப்பு, ஏனைய தரப்பு என அனைவருக்கும் மிகமிக மோசமான வலியை கொடுக்கும்.

ஆகவே, இதை தொடர்ந்து கொண்டு செல்வதென்பது அரசியல் ரீதியாக மிகவும் சவாலான விடயம். எந்தவொரு அரசுமே அவ்வாறு செய்ய விரும்பாது. நாட்டை மேல் நிலையில் தூக்கி நிறுத்துவதற்காக அரசியல் ரீதியாக அரசியல்வாதிகள் தற்கொலை செய்ய விரும்பமாட்டார்கள்.

ஆகவே, இப்போது ஏற்பட்டுள்ள நிலைமை கூட, ஒன்றுமே செய்ய முடியாத காரணத்தினால் அவ்வாறான ஒரு உறுதி மொழியை கொடுத்துவிட்டு, இடை நடுவில் இதனை கைவிடும் சாத்தியமே அதிகமாக காணப்படுகின்றது. இதனை நீண்ட காலத்திற்கு கொண்டு செல்வது மிகமிக கடினம். இந்த கொள்கைக்கு எதிராக நாட்டிலே தற்போது எதிர்ப்பு கிளம்பியுள்ளது. இது நீண்ட காலத்திற்கு செல்வது என்பது நிச்சயமாக நடைபெறுவதற்கான சாத்தியம் இல்லை.

1950 முதல், இலங்கை சர்வதேச நாணய நிதியத்துடன் நிபந்தனைகளுடன் 16 கடன் ஏற்பாடுகளை உருவாக்கியுள்ளது. (அவை 1965, 1966, 1968, 1971, 1974, 1979, 1983, 1988,1991, 2001, 2003, 2009, மற்றும் 2016 ஆகும்). ஆனால் இந்த 16 தடவைகளில் 9 தடவைகள் இடைநடுவில் கைவிடப்பட்டது. இடை நடுவில் கைவிடுவது என்றால், சரி என ஒப்புக் கொண்டு, இரண்டு தவணை கடன் வரும் வரை பார்த்துக் கொண்டிருப்பது. அது வந்ததற்கு பிறகு, நிலைமை சீரடைந்ததற்கு பிறகு எங்களால் செய்ய முடியாது என்று அப்படியே விட்டுவிடுவது. கடந்த தடவைகளில் அது தான் நடந்துள்ளது." என்று கூறியிருந்தார்.

அதாவது முன்னவைபோல இம்முறையும் இந்த நிபந்தனைகளை இலங்கை அரசாங்கம் நிறைவேற்ற தவறுமாக இருந்தால் மூன்றாவது தவணைக் கடன் உதவியினைச் சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து பெற்றுக் கொள்வது இயலாத காரியமாக மாறக்கூடிய வாய்ப்பு ஏற்படலாம்.

இரண்டாவது தவணைக் கடன் ஜனவரி மாதம் அளவில் கிடைக்கும் என எதிர்ப்பார்க்கலாம். அதைப்பெறுவதில் பெரியளவிலான் சவால்கள் இருப்பதாகத் தென்படவில்லை.

### சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கையில் உள்ள 16 முக்கிய பரிந்துரைகள்

அறிக்கையில் வழங்கப்பட்ட பரிந்துரைகளில், 16 முக்கிய பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அவை குறுகியகால (அறிக்கை வெளியிடப்பட்ட 12 மாதங்களுக்குள்) மற்றும் நடுத்தர கால (அறிக்கை வெளியிடப்பட்ட 13-24 மாதங்களுக்குள்) மற்றும் குறுகிய-கால மற்றும் நடுத்தர கால. பரிந்துரைகள் செய்யப்பட உள்ளன. அவற்றைச் செயற்படுத்துவதற்கான நிறுவனங்களும் IMF பிரதிநிதிகளால் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

இந்த பரிந்துரைகள் ஆபத்து உள்ள பகுதிகளில் கவனம் செலுத்துவதன் மூலம் நிர்வாகத்தை மேம்படுத்துவதற்கான அணுகு முறையாக வடிவமைக்கப்பட்டுள்ளன.

அந்த அணுகு முறைகள், ஒவ்வொரு நிறுவனத்தின் அதிகாரத்தின் தெளிவு மற்றும் முக்கிய செயற்பாடுகளுக்கான பொறுப்பு அடிப்படையில் பொறுப்புக் கூறல் மற்றும் சட்ட அமுலாக்க முகமைகளின் நிதி மற்றும் செயற்பாட்டு சுதந்திரம், அரசாங்க நடைமுறைகளின் வெளிப்படைத் தன்மை மற்றும் பொது நிதி மற்றும் சொத்துக்களின் பயன்பாட்டிற்கான திட்டமிடல், செலவு மற்றும் கணக்கியல் ஆகியவற்றில் செயல்திறன் தகவலைப் பொதுவில் வைப்பதற்கான திறமையான வழி முறைகளை உருவாக்குவதற்கான நிலைமைகளை உருவாக்குதல் போன்றவற்றை உள்ளடக்கியுள்ளன.

### பரிந்துரை-1- இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவை நியமிப்பதற்கான நிபுணர்குழு

இலஞ்சம் அல்லது ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் ஆணையாளர்கள் மற்றும் பணிப்பாளர் நாயகம் ஆகியோரை நியமனம் செய்வதில் உதவுவதற்கு 2023 நவம்பருக்குள் சுயாதீன ஊழல் எதிர்ப்பு நிபுணர்களைக் கொண்ட ஆலோசனைக் குழுவை ஸ்தாபிக்குமாறு முதல் பரிந்துரை கோருகிறது.

பொறுப்புக் கூறலை வலுப்படுத்துவதையும் வெளிப்படைத் தன்மையை அதிகரிப்பதையும் நோக்கமாகக் கொண்ட அரசியல் நிர்ணய சபைக்கு இது குறுகிய காலப் பரிந்துரையாகும்.

இலஞ்ச ஊழல் எதிர்ப்பு ஆணைக் குழுவிற்கு கடந்த காலங்களில் பதவியில் இருந்த ஜனாதிபதிகள் தமக்கு வேண்டப்பட்டவர்களை, விசுவாசமானவர்களை நியமித்த போக்கை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. நிறைவேற்று அதிகாரத்தினைப் பயன்படுத்தி தமக்கு அரசியல் விசுவாசத்தினை காட்டும் நபர்களை மாறி மாறி பதவிக்கு வந்த ஆட்சியாளர்கள் நியமித்தார்கள்.

இச்செயற்பாடும் இந்நாட்டில் ஆளுகை செயன்முறையின் பிரதான வீழ்ச்சிக்கு காரணமாக அமைந்துள்ளது. ஆகவேதான் தகுதியான ஆலோசனைக் குழுவொன்றை நியமித்து, அவர்கள் வழங்குகின்ற ஆலோசனையின் பெயரில் இலஞ்ச மற்றும் ஊழல் எதிர்ப்பு ஆணைக்குழுவிற்கான உறுப்பினர்களை நியமிக்க வேண்டும் என்று இவ்வறிக்கை குறிப்பிடுகின்றது.

### பரிந்துரை -2 ஜனாதிபதி உள்ளிட்ட உயர் அதிகாரிகளின் சொத்துக்களை வெளிப்படுத்தல்

உயர் அதிகாரிகளுக்கான (ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள்) சொத்துப்பிரகடனங்களைஜுலை 2024 இற்குள் நியமிக்கப்பட்ட இணையத்தளத்தில் வெளியிட இலஞ்சம் அல்லது ஊழல் விசாரணை ஆணைக்குழு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இதுவும் குறுகிய காலப் பணியாகும். இது பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படைத் தன்மையை வலுப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொழும்பை...

உலகின் மிகப்பெரிய சுற்றுலா கப்பல்களின் ஒன்றான 'Celebrity Edge' எனும் அதிசொகுசு பயணிகள் கப்பல் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

இந்தியாவின் கொச்சியில் இருந்து 2,780 பயணிகளுடன் குறித்த கப்பல் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

அமெரிக்கா, அவுஸ்திரேலியா மற்றும் கனடா ஆகிய நாடுகளைச் சேர்ந்த 1,273 பணியாளர்கள் இந்தக் கப்பலில் பணியாற்றுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

306 மீற்றர் நீளமுள்ள இந்தக் கப்பல் 15 தளங்கள் மற்றும் நவீன வசதிகளைக் கொண்டுள்ளது. (ம-7)

## இளம் ஆசிரியர்...

சேர்ந்த அமலவீர நாணயக்கார என்ற 27 வயது இளைஞரே இவ்வாறு சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார். (ம-7)

## உரும்பிராயில்...

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

தாக்குதலுக்கு இலக்கானவர் யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் உயிரிழந்தார்.

உணவகம் ஒன்றில் பணியாற்றும் உரும்பிராய் தெற்கைச் சேர்ந்த சுப்பிரமணியம் பிறேமராசன் என்ற 66 வயதான முதியவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உணவகம் ஒன்றில் ஏற்பட்ட முரண்பாடே கொலைக்கான காரணம் எனத் தெரியவரும் நிலையில் அதே பகுதியை சேர்ந்த வாய் பேச இயலாத 44 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொலை நடந்த இடத்தை யாழ்ப்பாணம் நீதவான் ஏ.ஆனந்தராஜா நேற்று பார்வையிட்டதுடன் சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,33,104)

## யாழ்.போதனா...

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் குறித்த நபர் உயிரிழந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

உயிரிழந்தவர் சில நாட்களுக்கு முன்னர் திருட்டுச் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் அடிப்படையில் வட்டுக் கோட்டை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசாரணைகளுக்கு பின்னர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் சிறைச்சாலையில் இருந்தபோது சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார்.

மரண விசாரணை அதிகாரியின் அறிக்கை, சட்ட மருத்துவ அதிகாரியின் அறிக்கைக்கு பின்னரே உயிரிழப்புக்கான காரணம் தெரியவரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் உயிரிழந்தவரின் தாயார் கடந்த நவம்பர் 10ஆம் திகதி இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்ப்பாணம் பிராந்திய அலுவலகத்தில் முறைப்பாடொன்றையும் பதிவு செய்துள்ளார்.

முறைப்பாட்டில் தனது மகன் வட்டுக்கோட்டை பொலிஸாரால் விசாரணை என்ற பெயரில் துன்புறுத்தப்பட்டு கொடூரமாக தாக்கப்பட்டதாகவும் இதனாலேயே உயிரிழந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

உயிரிழக்க முன் குறித்த இளைஞன் வைத்தியசாலையில் வைத்து தெரிவிக்கையில்,

வட்டுக்கோட்டை பொலிஸார் களவு சம்பவம் குறித்து சந்தேகத்தின் பேரில் கொண்டு சென்று கட்டித் தூக்கி விட்டு அடித்தார்கள்.

தண்ணி போட்டுவிட்டு, முகத்திற்கு துணியை கட்டி விட்டு தண்ணீர் ஊற்றி ஊற்றி அடித்தார்கள். தொண்டையால் சாப்பாடு இறங்குதில்லை. கொஞ்சமாகதான் சாப்பிட முடிகிறது. சாப்பாட்டிற்கு மனமே இல்லாமல் உள்ளது.

பின்னர் நிலத்தில் இருந்து இரண்டு முழம் உயரத்தில் தலைகீழாக கட்டித் தூக்கிவிட்டு, கையை பின்பக்கமாக கட்டிவிட்டு கேட்டு கேட்டு கொடூரமாக தாங்கினார்கள். நான் களவு எடுக்கவில்லை என்று கூறினேன்.

பின்னர் பெற்றோல் பையினுள் போட்டுவிட்டு தாக்கினார்கள். நான் மயங்கிவிட்டேன். இரண்டு கைகளும் தூக்க முடியாமல் உள்ளது.

பொலிஸ் நிலையத்தில் முதல்நாள் சாப்பாடு தரவில்லை. அடுத்தநாள் சாப்பாடு தரவில்லை. அவர்களது அறைக்குள் அழைத்துச் சென்று, மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு போடக்கூடாது, யாருக்கும் சொல்லக்கூடாது என்று மிரட்டினார்கள். பின்னர் அடுத்த நாளும் பயமுறுத்தினார்கள். சாராயம் தந்து குடிக்குமாறு கூறினார்கள் என்றார்.

விளக்கமறியல் கைதி உயிரிழந்தமை தொடர்பில் பொலிஸார் மீது உறவினர்களால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுத் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க யாழ்ப்பாணம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் பொலிஸ் அதிகாரிகள் குழு நியமிக்கப்பட்டுள்ளது. (ம-7,33,104)

## பருத்தித்துறை...

நேற்று முன்தினம் சனிக்கிழமை இரண்டு படகில் வந்த 22 தமிழக மீனவர்களை கடற்படையினர் கைது செய்தனர்.

இவ்வாறு இராமேஸ்வரம் மீனவர்கள் 22 பேர் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட செய்தி இராமேஸ்வரத்தில் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியிருந்தது. இதேநேரம் இராமேஸ்வரத்துக்கு இரு நாள் பயணமாக இந்தியாவின் மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் நேற்று முன்தினம் சென்ற நிலையில், மீனவர்கள் அமைப்புகளின் பிரதிநிதிகள் நிதி அமைச்சரை நேரில் சந்தித்து கைதான தமது உறவுகளை அவர்களின் படகுகளுடன் உடன் விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தனர்.

மீனவர்களின் கோரிக்கையின் பேரில் இலங்கை ஜனாதிபதியைத் தொடர்பு கொண்ட இந்திய நிதி அமைச்சர், மீனவர்களின் விடுதலை தொடர்பில் நடவடிக்கை எடுக்கக் கோரினார்.

அதனையடுத்து 22 மீனவர்களையும் உடன் விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. அவர்களது படகுகளில் அவர்களை ஏற்றி அவர்களை இலங்கையின் கடல் எல்லை வரை இலங்கைக் கடற்படையினர் கூட்டிச் சென்றனர். அங்கிருந்து நேற்று அதிகாலை தமிழகத்துக்கு அவர்கள் அனுப்பி வைக்கப்பட்டனர். (ம-7,60)

## ராஜபக்ஷக்களை...

யெல்ல, ராஜித சேனாரத்ன மற்றும் சரத் பொன் சேகா ஆகிய எம்.பிக்கள் கூட்டாகத் தெரிவித்தனர். (ம-7)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3545
சீட்டிழுப்பு திகதி 19.11.2023
ஆங்கில எழுத்து X
வெற்றி இலக்கங்கள் 05 34 42 77
X 02511

தன நிதானய
திகதி 2023.11.19
சீட்டிழுப்பு இலக்கம் 1333
L 30 61 66 74 L
28012

லக்கி 7
திகதி 19.11.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0129
L7 இலக்கம் 3 2
வெற்றி இலக்கினம் மிதுனம்
வெற்றி இலக்கங்கள் 3 4 7 6 0 7

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.11.19
சீட்டிழுப்பு இலக்கம் 0612
மகரம் 02 06 37 59 மகரம்
43768 19

மெகா பவர்
திகதி 19/11/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1651
J 10 19 33 43 47
64951

மஹஜன சம்பத
திகதி 2023/11/19
சீட்டிழுப்பு இலக்கம் 5303
N 6 8 1 6 3 0

உத்தியோகபூர்வ முடிவுகள்
திகதி 19.11.2023 வெற்றி வாரம் 011
G 3 4 9 2 4 1
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 21,656,038.40
DLB தொலை பேசி: 011-2 333 546-47 Web: www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2277 வர்ணம் செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2023.11.19 தினம் ஞாயிற்றுக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 21 42 55 57 M
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 57,061,060/-

சனிதா
திகதி 2023.11.19 வெற்றி வாரம் 4438
வெற்றி இலக்கங்கள் 20 37 42 44 W
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.64,327,472.00
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சசிரி
வெற்றி வாரம் 404
சீட்டிழுப்பு திகதி 2023.11.19
வெற்றி இலக்கங்கள் 04 05 17
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,836,400/-

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3989 வர்ணம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2023.11.19 தினம் ஞாயிற்றுக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 34 38 40 54
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,340,240/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
U 10 18 52 62 72
1453 மஞ்சள் 2023.11.19 ஞாயிறு
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 467,016,774.20

அத கோடிபதி ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம்: 2103
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.70,235,744/-
சீட்டிழுப்பு திகதி: 2023.11.19
வெற்றி இலக்கங்கள் 11 12 37 53 P


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கும் மலையகமும் இணைய வேண்டும்

## இராதாகிருஷ்ணன் எம்.பி

(ஹட்டன்)

வடக்கு கிழக்கு மற்றும் மலையக மக்களுக்கு இடையில் ஒற்றுமை நிலவ வேண்டும் என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

ஹட்டனில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தந்தை செல்வாவின் 125 ஆவது நினைவுதின நிகழ்வில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (ம-7)

# மனைவி தாக்கியதில் கணவன் உயிரிழப்பு

(இபலோகம)

இபலோகம, பலுகஸ்வெவ பிரதேசத்தில் பெண்ணொருவர் தனது கணவரைக் கட்டையால் அடித்துக் கொன்றுள்ளார்.

அவர்களது வீட்டில் நேற்றுமுன்தினம் இரவு இக்கொலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இருவருக்கும் இடையே ஏற்பட்ட வாக்குவாதம் காரணமாக கணவன் மனைவியை தாக்குவதற்காக கூரிய ஆயுதத்தால் பின்தொடர்ந்துள்ளார்.

அவர் வீட்டின் அறை ஒன்றில் ஓடி ஒளிந்து கொண்டதும், கணவர் வந்தவுடன், மனைவி அறையிலிருந்த கட்டையை எடுத்து தலையில் அடித்தது பொலிஸாரின் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

உயிரிழந்தவர் 52 வயதுடையவர் என்பதுடன், 47 வயதுடைய மனைவி இபலோகம பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-7)


ENGLISH for Gr. 6 - O/L
P.THARMAKUMARAN (P.Mathan)
BA(Eng.Lit), Dip.in.Eng
NEWTON Group Classes
18/18, Wyman Road, Nallur.
TP: 077 792 3653
(17920)

ENGLISH LITERATURE For GRADE 9
மிக விரைவில் ஆரம்பம் - பதிவுகளுக்கு
077 792 3653 (TP, Whatsapp)
P.THARMAKUMARAN (P.Mathan)
BA(Eng.Lit), Dip.in.Eng
NEWTON
Group Classes Nallur
(Near TCT Super Market)
(17920)

விரைவு பொதிகள் சேவை
DHL
வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள் சேவை 3 - 5 நாட்களுக்குள் வழங்கப்படுகின்றன.
Lanka Cargo Worldwide Express
இல. 315, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
070 375 0002
(17936)

CANADA
VISITOR VISA
VISITOR VISA வில் கனடா செல்வதற்குரிய ஆலோசனைகள் மற்றும் Online விண்ணப்பங்கள் விரைவாக செய்து தரப்படும்
CIMS COLLEGE (C-7680)
0777-068-777
49A.சப்பல் லேன். யாழ்ப்பாணம்
V2 TRAVELS

ENGLISH
GRADE - 6 (2024)
■Reading ■Listening
■Writing ■Speaking ■Presentation
● ஆங்கில மொழி மூலம் கற்க இருப்போருக்கு விசேட பயிற்சிகள்.
மிக விரைவில் ஆரம்பம்
பதிவுகளுக்கு 077 792 3653
P.Tharmakumaran (P.MATHAN)
BA (Eng.Lit), Dip. in Eng.
(17920)
NEWTON GROUP CLASSES
18/18, Wyman Road, Nallur,
Near TCT Super Market

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (17919)
076 825 7716 (ஆகாஸ்)

மாருதம்
கடலை வடை - 20/=
பற்றிஸ் - 25/=
சம்சா - 25/=
றோள்ஸ் - 40/=
பூந்தி லட்டு - 40/=
ஓடருக்கு பெற்றுக் கொள்ளலாம்.
077 275 9799
(17921)

வேலைவாய்ப்பு
சாரதி, கிளார்க், முகாமையாளர், கிளீனர், Maintenance, Cook, உதவியாளர்
074 083 3368
077 773 3368
(17941)


## மரண அறிவித்தல்

### துரைசிங்கம் பாக்கியரத்தினம்



பிறப்பு 21.02.1935 இறப்பு 17.11.2023

புன்னாலைக்கட்டுவனைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட துரைசிங்கம் பாக்கியரத்தினம் அவர்கள் கடந்த 17.11.2023 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.11.2023) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 10 மணியளவில் காடை கரம்பை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

புன்னாலைக்கட்டுவன் வடக்கு,
புன்னாலைக்கட்டுவன். (17934)

தகவல்: குடும்பத்தினர்
077 945 4688,
074 067 7637


Canada and Italy Visa
(Canada, Italy, UK, USA) Work visa, Visitor visa, students visa & business visa செய்து தரப்படும்.மேலும் சகல நாடுகளுக்கான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் செய்து தரப்படும்.
Visa Consultant
134, Adiyapatham Road, Thirunelvely, Jaffna.
077 038 5584
(17936)

Computer Training Class
முதல் முறையாக Computer கற்க விரும்புவோருக்கு
Computer Basic Concept and maintenance
இக் கற்கைநெறிக்கு!
• Fundamentals of Computer with IT
• ms windows • File management
• ms word • ms Excel
• ms power point • Photoshop
• ms Access • Corel draw
• Internet E.mail & communication Technology ஆகியவை கற்பிக்கப்படும்.
online மற்றும் Physical Classes @Jaffna
Course Details:
◆ வயதெல்லை இல்லை
◆ தனிப்பட்ட வகுப்புகள் மட்டும் (individual)
◆ உங்கள் நேரத்திற்கு ஏற்றவாறு வகுப்புக்களை பதிவு செய்யலாம்.
◆ இல்லத்தரசிகள், office இல் வேலை செய்பவர்கள், O/L, A/L முடித்த மாணவர்கள் யாவருக்கும் உகந்தது.
(C-7679)
Contact :
V.V.Moorthy(IT & ICT)
Tel : 077 746 9282
(Whatsapp)
E.mail:
studentwait@outlook.com

Vacancies
Clerk, Account clerk, Manager, Receptionist, Telephone Operator, office Admin, Graphic Designer, Video Editor
076 098 4532
074 138 3368
(17941)

காணி விற்பனைக்கு
GOLDEN Real Estate
கைதடிச் சந்திக்கு அருகாமையில் 48 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்குண்டு.
■ கைதடிச் சந்தியில் இந்து 250m தூரத்தில்
■ வங்கிகள் தபால் நிலையம் 200m தூரம்
■ A9 வீதியில் இருந்து இரண்டாவது காணி (50m தூரம்)
■ நன்னீர் ஊற்று நிலம்
■ இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
■ சித்த போதனா வைத்தியசாலைக்கு நேர் எதிராக அமைந்துள்ளது.
■ வீடுகள் கட்டுவதற்கும் மண்டபங்கள் அமைப்பதற்கும் சிறந்த காணி
■ வடமாகாண சபை அலுவலகம் 300m தூரத்தில்
■ சித்த மருத்துவபீட பல்கலைக்கழகம் 200m தூரத்தில்
■ பார்வையிடும் நேரம் காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை
(17938)
071 173 3911,
076 853 5022, 076 213 7239

உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
(C-7680)
எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம்
• சாவகச்சேரி • மானிப்பாய்
• நெல்லியடி • பருத்தித்துறை
• திருகோணமலை • வல்வெட்டித்துறை
• கோப்பாய் • புத்தூர்
• பண்டத்தரிப்பு • சங்கானை
• கொழும்பு
வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.11.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org